


34 ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com




நதி: 34 பாலம்: 03 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் FEBRUARY 01, 2024

# சர்வதேச நீதிமன்றத்தின் தற்காலிக நடவடிக்கைகள்

தென்னாபிரிக்கா அரசு 2023 டிசம்பர் 29ஆம் திகதி இஸ்ரேல், காஸா மீது நடத்தும் தாக்குதல்கள் "இனப்படு கொலைச் செயல்கள்" என சர்வதேச நீதிமன்றத்தில் இஸ்ரேலுக்கு எதிராகக் குற்றம்சாட்டி வழக்குத் தாக்கல் செய்திருந்தது. இந்த வழக்கின் இரண்டு நாள் பொது விசாரணையை சர்வதேச நீதிமன்றம் 2024 ஜனவரி 11ஆம் திகதி ஆரம்பித்திருந்தது. அப்போது தென்னா பிரிக்க அரசின் சட்டத்தரணிகளும் இஸ்ரேலிய அரசின் சட்டத்தரணிகளும் தங்கள் பக்க நியாயங்களை சர்வதேச நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் தெளிவுபடுத்தி இருந்தனர்.



The International Court of Justice Thanks:Reuters/Piroschka van de Wouw

சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நடைபெற்று தீர்ப்பு வருவதற்கு நான்கு ஆண்டுகள் வரையில் எடுக்கும் என்பதால், தென்னாபிரிக்க அரசு காஸா மீதான இஸ்ரேலின் இடைவிடாத குண்டுத்தாக்குதலை உடனடியாக நிறுத்த இடைக்கால உத்தரவை சர்வதேச நீதி மன்றம் உடனடியாக வழங்கும்படி கேட்டிருந்தது.

சர்வதேச நீதிமன்றம் அதற்கு வழங்கப் பட்டுள்ள "தற்காலிக நடவடிக்கைகளை" (Provisional measures) எடுக்கும் அதிகாரத்தின்கீழ் தேவை ஏற்படின் ஒரு வழக்கு விசாரணை ஆரம்பமாகும் முன்னர் அவசர உத்தரவை வழங்க முடியும். இந்த அதிகாரத்தைப் பாவித்தே இஸ்ரேலின் காஸா மீதான இடைவிடாத குண்டுத் தாக்குதலை உடனடியாக நிறுத்த சர்வ தேச நீதிமன்றம் உத்தரவு இட வேண்டும் என தென்னாபிரிக்க அரசு கேட்டிருந்தது.

நெதர்லாந்தில் உள்ள Hague நகரில் இருக்கும் சர்வதேச நீதிமன்றத்தின் 17 நீதிபதிகள் குழு இரண்டு கிழமையாக தென்னாபிரிக்கா அரசும், இஸ்ரேலிய அரசும் சமர்ப்பித்திருந்த அவரவர் பக்க நியாயங்களை ஆராய்ந்து 2024 ஜனவரி 26ஆம் திகதி தங்களது ஆறு தற்காலிக நடவடிக்கைகளை வெளியிட்டிருந்தன. பாலஸ்தீனர்களுக்கு எதிராக இஸ்ரேல் இனப்படுகொலை செய்து வருகிறது என்ற தென்னாபிரிக்காவின் குற்றச்சாட்டை நீதி மன்றம் பரிசீலித்து வரும் பரந்த வழக்கில் இந்த முடிவு ஒரு படியாகும்.

ஆறு தற்காலிக நடவடிக்கைகள்:

1. இனப்படுகொலை தொடர்பான ஐ.நா. உடன்படிக்கையின் வரம்பிற்குள் உள்ள அனைத்துச் செயல்களையும் கடைப் பிடிக்குமாறு இஸ்ரேலுக்கு சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டது. அதாவது, பாலஸ்தீனிய குடிமக்களைப் பாது காப்பதைக் குறிப்பிட்ட நீதிமன்றம், "குடிமக்களைக் கொல்வதைத் தடுக்க இஸ்ரேல் அரசு செயற்பட வேண்டும்." "குடிமக்களுக்குக் கடுமையான உடல் அல்லது மனப் பாதிப்பை ஏற்படுத்துதல், முழுமையான அல்லது பகுதியாக உடல் அழிவைக் கொண்டு வரக்கூடிய திட்டமிட்ட தாக்குதலை நடத்துதல், குடிமக்களுக்குக் குழந்தைகள் பிறப்பதைத் தடுக்கும் நோக்கத்தில் நடவடிக்கைகளை எடுத்தல் என்பவற்றைத் தடுக்க இஸ்ரேலிய அரசு செயற்பட வேண்டும்". சர்வதேச நீதி மன்றத்தின் இந்த உத்தரவு 17 நீதிபதி களின் 15-2 வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டது.

2. மேலே முதலாவதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளதில் உள்ள எந்த ஒரு செயலையும், இஸ்ரேலிய இராணுவம் செய்யாதவாறு இஸ்ரேலிய அரசு உடனடியாக நட வடிக்கை எடுக்க வேண்டும். சர்வதேச நீதிமன்றத்தின் இந்த உத்தரவு 17 நீதிபதிகளின் 15-2 வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டது.

3. காஸா பகுதியில் வாழும் பாலஸ்தீனக் குடிமக்களை நேரடியாக இனப்படுகொலை செய்வதையும், பகிரங்கமாக இனப்படு கொலை செய்யத் தூண்டுவதையும், இஸ்ரேலிய அரசு தனது அதிகாரத்திற் குள் உள்ள அனைத்து நடவடிக்கைகளை யும் எடுத்துத் தடுக்க வேண்டும். அத்துடன் அவ்வாறு செய்வோரை தண்டிக் கவும் வேண்டும். சர்வதேச நீதிமன்றத் தின் இந்த உத்தரவு 17 நீதிபதி களின் 16-1 வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டது.

4. காஸா பகுதியில் வாழும் பாலஸ்தீனர் கள் எதிர்கொள்ளும் பாதகமான வாழ்க்கை நிலைமைகளைத் தீர்ப்பதற்கு அவசரமாகத்

தொடர்ச்சி 05 பக்கம்

















BUILD YOUR
ESTATE STYLE
CUSTOM HOUSE
READY TO BUILD
LAND
FOR SALE
IN THE DURHAM & GTA
Full Home Designs — Fully Insured, Customer Focused, Outstanding Design Team Here To Support Your Dream Home.
Only
$699K


HOUSE
FOR RENT
Warden &
401/Sheppard
Bright living & dining room with walkout to south facing patio & fenced yard. Nice hardwood floors, eat-in kitchen with stainless steel appliances. Spacious bedrooms. Partially finished basement with new broadloom, fresh paint, cozy wood burning fireplace & extra bath with separate shower. Plenty of space to make room for the extended family.
PROPERTY FEATURES
• Living Room • 2 Bathroom
• Dining Room • Smoke and pet free home
• 3 Bedroom • Bungalow House
APARTMENT
FOR RENT
Enjoy Brand New Never Lived In Immaculate 2 Bedroom, 2 Bathroom Suite In Luxury Condo In Prime Scarborough Location. Excellent Location, Minutes To TTC, Highway 401, Go Train
FACILITIES
MORE INFORMATION
647- 296- 0596
www.ParaCity.ca
KENNEDY
& 401


HOME FOR SALE
PRIDE OF OWNERSHIP!
Custom Home over 5000 sq ft
RICHMOND HILL
TORONTO
TORONTO
OSHAWA
OFFICE USE
You're in the right place for real estate!
Book Now
647-296-0596
www.ParaCity.ca


FOR SALE
New Brunswick
CUSTOM HOME
ONLY
1.4M
6500 SQ.FT
HOUSE
For Your Beloved Family


Get in Touch
Para Tisikulasingam
Real Estate Agent
HomeLife/GTA Realty Inc.
Brokerage*
HOMELIFE
HIGHER STANDARDS
Raja Mahendran
Broker/Owner
HomeLife/GTA Realty Inc.
Brokerage*
(647) 296-0596
HOMELIFE/GTA REALTY INC., BROKERAGE*
independently owned & operated
5215 Finch Ave E #203, Scarborough, ON M1S 0C2
O : 416.21.6969 | F: 416.321.6963
(416) 321-6969



Available Till Midnight
Including Weekends & Holidays

# ANTON DHARMASEELAN

MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST
## FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

# 416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# பதவிப் போட்டியால் உடையும் தமிழரசுக் கட்சி




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரனும் சி.சிறிதரனும் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிட்டனர்.

கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தில், இரகசிய வாக்கெடுப்பு மூலம் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக சிறிதரன் தெரிவு செய்யப்பட்டார். சிறிதரனின் ஆதரவாளர்கள் குறிப்பாக, வன்னியில் உள்ள ஆதரவாளர்கள் சிறிதரனின் வெற்றியை கொண்டாடி வருகின்றனர்.

சிறிதரன் தனது முதற் கடமையாக கிளிநொச்சி கனகபுரத்திலுள்ள மாவீரர் துயிலுமில்லத்தில் சுடரேற்றி, வணக்கம் செலுத்தி தனது பயணத்தை ஆரம்பித்தார். அனைவரையும் இணைத்துக் கொண்டு புதிய அரசியல் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவ்வாறெனில், தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தி இடையில் பிரிந்து சென்ற கட்சிகளை மீண்டும் உள்வாங்கி பயணிக்கும் பணியை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மேற்கொள்வாரா? என்கின்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

ஏனெனில் தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு அவ்வாறே ஒன்றிணைந்திருக்க வேண்டும் என்பது பெரும்பாலான தமிழ் மக்களின் விருப்பமாக உள்ளது.

ஆனால், தமிழரசுக் கட்சியின் புதிய தலைமை தெரிவு செய்யப்பட்டு அடுத்தடுத்த பதவிகளுக்கு உறுப்பினர்களை தெரிவு செய்ய வேண்டிய நிலையில், தமிழரசுக் கட்சிக்குள்ளேயே குழப்பம் ஏற்பட்டுள்ளது.



தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவு செய்யப்பட்டுள்ள போதும் அதன் மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தற்போது தமிழரசுக்கட்சி இரண்டாக உடைந்திருக்கிறது என தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவிக்கின்றார்.

உண்மையில், தமிழரசுக் கட்சியின் பதவிகள் தொடர்பில் போட்டிகளும், கருத்து முரண்பாடுகளும், இழுபறிகளும் இடம்பெற்றுள்ளதால் தமிழரசுக் கட்சிக்குள் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளமை தெளிவாகத் தெரிகின்றது.

தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிட்ட இருவரான சுமந்திரன், சிறிதரன் ஆகிய இருவரில் சிறிதரன் தெரிவு செய்யப்பட்டமைக்கு சுமந்திரனை வெற்றிபெறச் செய்யக் கூடாது என்பதே காரணம் என்று சொல்லப்படுகின்றது. சுமந்திரனுக்கு ஏற்பட்டுள்ள தோல்வியை அவராலும் அவருக்கு நெருக்கமானவர்களாலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனினும், சுமந்திரன் தனது தோல்வியை பெரிதாக வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

அவர் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளராக தான் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று எதிர்பார்த்தார். அதுவும் சிக்கலாகி விட்டது.

தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் குகதாசனே என்றும், கட்சியின் மகாநாடு மட்டுமே பிற்போடப்பட்டுள்ளதாகவும், தெரிவு செய்யப்பட்ட நிர்வாகமே சட்ட ரீதியாக இயங்கும் எனவும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

கடந்த 27ஆம் திகதி திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் பொதுக் குழு கூட்டம் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு 28ஆம் திகதி கட்சி காரியாலயத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் மாநாட்டிற்கான ஆலோசனைக் கூட்டமாக கட்சியின் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது சுமந்திரனை கட்சியின் உபதலைவராக நியமிக்குமாறு சிறிதரன் கோரியிருந்தார் என்றும், அதனை ஏற்றுக் கொள்ளாத சுமந்திரன் தம்மை பொதுச் செயலாளராக நியமிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

இதன்போது, மட்டக்களப்பைச் சேர்ந்த சிறிநேசனும், திருகோணமலையை சேர்ந்த குகதாசனும், அம்பாறையை சேர்ந்த கலையரசனும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த குலநாயகமும் செயலாளர் பதவியை கோரிய நிலையில் அங்கு குழப்ப நிலைமை ஏற்பட்டது. புதிய தலைவர் சிறிதரன் அனைவருடனும் கலந்துரையாடி குகதாசனை முன்மொழிந்த நிலையில் அதனை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.



மீண்டும் சிலர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால் குழப்ப நிலைமை ஏற்பட்டது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பொதுச்சபையின் தீர்மானங்களை வாக்கெடுப்பிற்கு விடுத்தபோது அதனை பொதுச்சபை ஏற்றுக்கொண்டு வாக்களிப்பு ஊடாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆனால் அதனை சிலர் மீண்டும் எதிர்த்தன் காரணமாக கூட்டம் முடிவுறுத்தப்பட்டதுடன் மாநாடும் பிற்போடப்பட்டது. எனினும், புதிய நிர்வாகமே சட்ட ரீதியான நிர்வாகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளதனால் அதுவே நிர்வாகமாக ஏற்றுக் கொள்ளப்படும் என சாணக்கியன் ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்தார்.

சாணக்கியனும் கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு ஆசைப்பட்டதாகவும் தெரியவருகின்றது. கொழும்பு கிளையைச் சேர்ந்த மத்திய குழு உறுப்பினரான ராட்னவேல் சாணக்கியனை செயலாளராக நியமிக்கலாமென பரிந்துரைத்த வேளையில், இதற்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. சாணக்கியனுக்கு கட்சியின் செயலாளருக்குரிய முதிர்ச்சி இல்லை என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இது சாணக்கியனுக்கு ஏமாற்றத்தையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழரசுக் கட்சியின் தலைவராக வடக்கைச் சேர்ந்த ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருக்கும் நிலையில், பொதுச் செயலாளர் பதவி கிழக்கைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்படுவதே பொருத்தமானதாக இருக்கும். வடக்கைச் சேர்ந்த உறுப்பினர்கள் இதனை ஏகமனதாக அறிவித்திருக்க வேண்டும். ஆயினும், கிழக்கிலுள்ளவர்கள் மத்தியிலேயே போட்டி ஏற்பட்டமையை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். பதவி என்று வருகின்ற போது சுயநலன் மேலோங்கி நிற்பதையே காண முடிகின்றது.

இந்த நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் தம்மை தலைமைக் கட்சியாகவும், தாய் கட்சியாகவும் கூறிக்கொள்ளும் இலங்கை தமிழரசுக் கட்சி எவ்வாறு பங்காளிக் கட்சிகளை அரவணைத்துச் செல்லப் போன்றது? தமிழ் தேசியக் கூட்டமைப்பை பழைய கட்டுக் கோப்புடன் மீளமைத்து பயணிக்க புதிய தலைமை விரும்பினாலும் அது எந்தளவு சாத்தியப்படும் என்று தெரியவில்லை.




விளம்பரம்
VLAMBARAM
34ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
www.tamilvanakkam.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# சர்வதேச...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

தேவையான அடிப்படைத் தேவைகள் மற்றும் மனிதாபிமான உதவி களை இஸ்ரேலிய அரசு உடனடியாக வழங்க வேண்டும். சர்வதேச நீதிமன்றத் தின் இந்த உத்தரவு 17 நீதிபதிகளின் 16-1 வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டது.



Judges at the International Court of Justice

5. இனப்படுகொலை தொடர்பான ஐ.நா. உடன்படிக்கையில் குறிப்பிட்ட மாதிரி இஸ்ரேலிய அரசின் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ள செயல்களின் ஆதாரங் களை பாதுகாக்கவும் அதன் அழிவைத் தடுக்கவும் இஸ்ரேலிய அரசு செயற்பட வேண்டும். சர்வதேச நீதிமன்றத்தின் இந்த உத்தரவு 17 நீதிபதிகளின் 15-2 வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டது.

6. இந்த உத்தரவுகள் வழங்கப்பட்ட திகதி யில் இருந்து ஒரு மாதத்திற்குள் இந்த உத்தரவுகளை நடைமுறைப்படுத்த இஸ்ரேலிய அரசு எடுத்த அனைத்து நடவடிக்கைகள் குறித்து அறிக்கை ஒன்றை சர்வதேச நீதிமன்றத்தில் இஸ்ரேலிய அரசு சமர்ப்பிக்க வேண்டும். சர்வதேச நீதிமன்றத்தின் இந்த உத்தரவு 17 நீதிபதிகளின் 15-2 வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டது.



The Peace Palace in The Hague, Netherlands which houses the ICJ

பாலஸ்தீனியர்களின் இனப்படுகொலையைத் தடுக்க எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என கடுமையாக இஸ்ரேலுக்கு உத்தரவிட்ட சர்வதேச நீதிமன்றம், தென்னாபிரிக்க அரசின் ஆதரவாளர்கள் எதிர்பார்த்த மாதிரி உடனடி போர் நிறுத்தத்திற்கு உத்தரவிட வில்லை.

சர்வதேச நீதிமன்றத்தின் இந்த தற்காலிக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவுகளை தங்கள் தரப்பிற்குக் கிடைத்த வெற்றி என இஸ்ரேலிய அரசும் தென்னாபிரிக்க அரசும் கூறியுள்ளன.
போர் நிறுத்தக் கோரிக்கையை சர்வதேச நீதிமன்றம் நிராகரித்துள்ளதை கொண்டா டிய இஸ்ரேலிய ஆதரவாளர்கள் இஸ்ரேல் நாட்டின் தற்பாதுகாப்பு உரிமையை சர்வதேச நீதிமன்றம் அங்கீகரித்துள்ள தாகக் கூறுகின்றனர்.

இஸ்ரேலிய அரசின் போர்க்கால தந்தி ரோபாயங்கள், காஸாவில் குடிமக்களின் அதிக இறப்பு எண்ணிக்கை மற்றும் மனி தாபிமான பேரழிவு தொடர்பாகப் பெரும் பான்மையான நீதிபதிகள் கண்டித்ததை பாலஸ்தீனிய ஆதரவாளர்கள் வரவேற் றுள்ளனர். தீர்ப்பில் உள்ள ஆறு நடவடிக்கைகளை 17 நீதிபதிகளில் 15-2 மற்றும் 16-1 என்ற பெரும்பான்மை வித்தியாசத்தில் அங்கீகரிக்கப்பட்டதையும், இஸ்ரேலிய அரசின் பிரதிநிதியான நீதிபதி கூட சர்வதேச நீதிமன்றத்தின் ஆறு உத்தரவுகளில் இரண்டுக்கு ஆதரவாக வாக்களித்ததையும் பாலஸ்தீனிய ஆதரவாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

Hebrew பல்கலைக்கழகத்தின் சட்டக் கல்லூரியின் மனித உரிமை நிபுணரான



South African's (left) and Israel's (right) delegation Thanks: AP Photo/Patrick Post

Bark Medina ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், சர்வதேச நீதிமன்றத்தின் உத்தரவுகளால் போர்முனையில் எந்தவித மான குறிப்பிடத்தக்க மாற்றுமும் ஏற்படாது என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில், இவ் உத்தரவுகளால் மனிதாபிமான உதவி வழங்குதல் அதிகரிக்கப்படலாம், போர் நடவடிக்கைகளை தூண்டும் பிரசாரங்கள் குறையலாம். ஆனால், இராணுவ நடவடிக்கையின் முக்கிய விடயத்தைப் பொறுத்தவரை களத்தில் எந்த மாற்றத்தையும் எதிர்பார்க்க முடியாது என்றார்.

இஸ்ரேலின் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சியின் (Labour Party) Merav Michaeli சர்வதேச நீதிமன்றத்தின் உத்தரவுகள் குறித்துக் கூறுகையில், இது இஸ்ரேலிய அரசுக்கு எதிரான "மஞ்சள் அட்டை" (Yellow Card) எனவும் இஸ்ரேல் நாட்டின் பெயருக்கு உலக நாடுகளிடையே பெரிய களங்கம் ஏற்பட்டுள்ளது எனவும் கூறினார்.

காஸாவின் சுகாதார அமைச்சு ஜனவரி 26இல் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஒக்ரோபர் 7ஆம் திகதிக்கு பின்னர் இது வரையில் 26,083 பேர் கொல்லப்பட்டதாக வும், 64,487 பேர் காயமடைந்துள்ளதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இஸ்ரேலிய இராணுவம் காஸாவில் இறந்தோரில் 9,000 பேர் ஹமாஸ் போராளிகள் எனத் தெரிவித்துள்ளது.

சர்வதேச நீதிமன்றத்தின் 17 நீதிபதிகளில் ஒருவரான இஸ்ரேலிய நீதிபதி Aharon Barak தனிப்பட்ட முறையில் கருத்துத் தெரிவிக்கும்போது, "இஸ்ரேல் மீதான இனப்படுகொலைக் குற்றச்சாட்டில் எந்த விதமான நம்பிக்கைத் தன்மை இல்லை என்று நான் உறுதியாக நம்பினாலும், சர்வதேச நீதிமன்றத்தின் இரண்டு உத்தரவுகளுக்கு நான் பெரும் பான்மை நீதிபதிகளுடன் சேர்ந்து வாக்களித்தேன். இந்த நடவடிக்கைகள் பதட்டங்களைக் குறைக்கவும், இஸ்ரேலிய அரசு சார்பானவர்களது தேவையற்ற பொது மக்களை சேதப்படுத்தும் தூண்டுதல் பேச்சுக்களைக் குறைக்க உதவும் என நம்புகிறேன். மனிதாபிமான உதவியை உறுதி செய்யும் நடவடிக்கைக்கும் நான் ஆதரவாக வாக்களித்தேன். இம்மனிதாபி மான உதவிகள் போர் நடவடிக்கைகளால் மிகவும் பாதிக்கப்பட்டோருக்கு ஆயுத மோதலின் விளைவைத் தணிக்கும்" என்றார்.

சர்வதேச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி யான அமெரிக்க நீதிபதி Joan E.




Presiding judge Joan Donoghue (right) opens the session at ICJ

Donoghue உரையாற்றுகையில், "இந்த இனப்படுகொலை வழக்கைத் தொடர தென்னாபிரிக்காவின் வாதங்களில் போது மான தரவுகள் உள்ளன. இதற்கிடையில் இஸ்ரேலியத் துருப்புகள் காஸாவில் உள்ள பாலஸ்தீனிய குடிமக்களைப் பாது காக்க நிறைய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. இனப்படுகொலையைத் தடுக்கவும் மற்றும் அதைப் பகிரங்கமாகத் தூண்டுவதைத் தடுக்கவும் இஸ்ரேலிய அரசு தனது அதிகாரத்திற்கு உட்பட்ட தன்னாலான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்" என்று கூறினார்.

இஸ்ரேலிய அரசு சார்பில் வாதிட்டவர்கள் இஸ்ரேல் இனப்படுகொலை செய்வதை மறுத்ததுடன் சர்வதேச நீதிமன்றம் தென்னாபிரிக்கா தாக்கல் செய்துள்ள இந்த வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டிருந்தனர். ஆனால், 17 நீதிபதிகளைக் கொண்ட இந்தக் குழு அதை முற்றாக நிராகரித்து வழக்கைத் தொடர முடிவெடுத்துள்ளது.

சர்வதேச நீதிமன்றத்தின் 17 நீதிபதிகளில் ஒருவரான உகண்டா நீதிபதி Julia Sebutinde மட்டுமே சர்வதேச நீதிமன்றத்தின் ஆறு உத்தரவுகளுக்கும் எதிராக வாக்களித்தவர்.

வழக்கமான சர்வதேச நீதிமன்றத்தின் 15 நீதிபதிகளுடன் இந்த வழக்கை விசாரிக்க தென்னாபிரிக்காவும், இஸ்ரேலும் தங்களது சார்பில் ஒரு நீதிபதியை நியமித்தனர். இவ்வாறு தென்னாபிரிக்காவில் நியமிக்கப் பட்ட நீதிபதி Dikgang Moseneke மற்றும் இஸ்ரேலினால் நியமிக்கப்பட்ட நீதிபதி Aharon Barak ஆவர்.



# நிகழ்நிலை காப்பு சட்டமூலம் மனித உரிமைகள் மீதான பாரிய தாக்குதல்!

- விகிர்தன் -

நிகழ்நிலை காப்பு (Online Safety Bill) சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளமை ஜனநாயகத்திற்கு பின்னடைவாகவே பார்க்கப்படுகின்றது. இதற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விமர்சனங்களும், எதிர்ப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸினால் சபைக்கு சமர்ப்பித்திருந்த நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் 46 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்த வேண்டிய தேவையிருப்பினும் ஒன்லைன் பாதுகாப்பு சட்டமூலத்தின் பொருளாதார விளைவுகளை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள இளைஞர்களை இ-வர்த்தகம் மூலம் பொருளாதாரத்தில் பங்கு கொள்ளச் செய்வதை இவ்வாறான சட்டங்கள் தடுக்கும் என அவர் கூறியுள்ளார்.

ஒருவர் சமூக ஊடகங்களில் தேவையற்ற விடயத்தை பதிவேற்றுவதால், முகநூல் மற்றும் யூ டியூப் போன்ற சேவை வழங்குநர்களை குற்றவாளிகளாக கருத முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஹர்ஷ டி சில்வா எதிர்க்கட்சி அரசியல்வாதி மட்டுமன்றி ஒரு பொருளாதார நிபுணர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நிகழ்நிலை காப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டமை இலங்கையின் மனித உரிமைகள் மீதான பாரிய தாக்குதல் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. இந்த சட்டம் கருத்து சுதந்திரத்தை ஒடுக்குவதற்கும் கருத்து வேறுபாடுகளை அடக்குவதற்கும் அரசாங்கத்தினால் பயன்படுத்தக்கூடிய புதிய ஆயுதம் எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

இந்த சட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கு உட்பட்டவை அல்லவெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திட்டுள்ள நிலையில் அதனை மீறுவதாக இச்சட்டமூலம் அமைந்துள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்டுள்ள நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தில் மாற்றங்கள் செய்யப்படாவிட்டால் அது பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என




ரெக் (Rec) அமைப்பு இலங்கையை எச்சரித்துள்ளது.

இந்த நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளமை தொடர்பில் அமெரிக்கா தனது கவலையை வெளியிட்டுள்ளது.

சிவில் சமூகம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்களின் கோரிக்கைகளை உள்ளடக்காமல் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட இலங்கையின் நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தின் தாக்கம் குறித்து அமெரிக்கா கவலை கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக விழுமியங்களை ஆபத்தில் தள்ளுவதுடன் தெளிவற்ற மற்றும் மிகையான கடுமையான சட்டங்கள் முதலீடு மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு இடையூறாக அமையும் என்பதுடன் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் எனவும் அமெரிக்கா கூறியுள்ளது.

வெளிப்படைத்தன்மைக்கு முன்னுரிமை அளிக்குமாறும், எந்தவொரு சட்டமும் மக்களின் குரல்களை நசுக்காமல் இருப்பதை உறுதி செய்யுமாறும் இலங்கையை அமெரிக்கா வலியுறுத்துகிறது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் மக்கள் அறிந்துள்ளார்களா? என Verité Research நிறுவனம் கருத்துக்கணிப்பு ஒன்றை நடத்தியுள்ளது.

சட்டமூலத்தில் அடங்கியுள்ள விடயங்களை தாம் அறிந்திருக்கவில்லை என கருத்துக் கணிப்பில் பங்கேற்ற 66 வீதமானோர் தெரிவித்துள்ளனர். நிகழ்நிலை காப்பு சட்டத்தால் சமூக ஊடகங்களை மக்கள் சுதந்திரமாக பயன்படுத்துவது முடக்கப்படும் என 56 வீதமானோர் பேர் கூறியுள்ளனர்.

நிகழ்நிலை காப்பு சட்டமூலம் குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது ஆட்சேபனையை வெளியிட்டுள்ளது.

இது குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிரிவிற்கான பிரதிப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி ஓர் அறிக்கையில், நிகழ்நிலை காப்பு சட்டமூலம் நீண்ட கால சிறைத் தண்டனைகளுக்கு வழிவகுக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டின் இறுதியில் இலங்கை நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களுக்கு தயாராகி வரும் நிலையில், இந்தச் சட்டம் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையை கடுமையாக அச்சுறுத்தும் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அலுவலகம், இந்தச் சட்டம் கிட்டத்தட்ட அனைத்து வகையான சட்டபூர்வமான வெளிப்பாட்டையும் குற்றமாக்கக் கூடும், இது கருத்துச் சுதந்திரத்தின் மீது பாரிய விளைவை ஏற்படுத்தும் சூழலை உருவாக்குகிறது என்று கூறியுள்ளது.

கூகுள், ஆப்பிள் மற்றும் மெட்டா போன்ற தொழில்நுட்ப நிறுவனங்களை உள்ளடக்கிய ஒரு தொழில்துறை அமைப்பான Asia Internet Coalition இந்த சட்டமூலம் 'எதிர்ப்புகளை ஒடுக்குவதற்கான ஒரு கொடூரமான அமைப்பு' என்றும், இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தின் சாத்தியமான வளர்ச்சியைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்றும் எச்சரித்துள்ளது.


உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மற்றும் சர்வதேச அமைப்புக்களாலும் வெறுக்கப்படுகின்ற- எச்சரிக்கை விடுக்கப்படுகின்ற இச்சட்டமூலம் தொடர்பில் எவ்வித கருத்துகளையும் வெளிப்படுத்தாது, இலங்கை ஜனாதிபதி தன் போக்கிலேயே பயணிப்பதானது நாட்டிற்கு பாரிய பாதிப்பையே ஏற்படுத்தும்.




## Words of Peace

பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:
www.timelesstoday.com
www.premrawat.com

நவீன வாழ்வின் அளவு கடந்த இரைச்சல்கள் சோர்வையும், நிலைதடுமாறும் உணர்வையும் நமக்கு ஏற்படுத்தலாம். ஆனால் இந்த இரைச்சல்களைக் குறைத்து வாழ்வில் நிம்மதியைக் காண வேண்டும் என்ற தீவிர ஆர்வம் நமக்கு இருக்கிறது. உலகப் புகழ் பெற்ற ஆசானும் நூலாசிரியருமான பிரேம் ராவத் விவேகம் நிறைந்த இப்புத்தகத்தின் மூலம் அமைதியை நாம் எல்லோரும் அனுபவிக்க முடியும் என்றும், அதற்கான ஆற்றல் நம்முள் மறைந்திருக்கிறதென்றும் கூறுகிறார். ஆனால் இந்த ஆற்றலை எப்படிச் செயல்படுத்துவதென்று நமக்குக் கற்றுத்தரப்படவில்லை என்றும் கூறுகிறார். நாம் இரைச்சலைக் குறைத்து




"உள்ளத்தின் குரலை" உணர்வதின் மூலம் நம் ஒவ்வொருவரின் உள்ளேயும் இசைத்துக் கொண்டிருக்கும் நுட்பமான ஆனால் வலிமையான அமைதியின் கீதத்தைக் கேட்பதற்கு அவர் வழி காட்டுகிறார். ஒருமுறை உண்மையிலேயே நம்முள்ளே உள்ள குரலை கேட்பதற்குக் கற்றுக் கொண்டோமானால், நாம் இவ்வுலகத்தை எதிர்கொள்ளும் போதும் அமைதியை நம்மால் தக்கவைத்துக் கொள்ள முடியும்.

"உள்ளத்தின் குரல்" என்னும் இந்த நூலானது ஒருவரது வாழ்நாள் ஆய்வின் உச்சமாகும். இந்தப் புத்தகம் நம் உள்ளத்தின் குரலில் நம் கவனத்தைக் குவிப்பதற்கு அடியெடுத்துக் கொடுக்கிறது. அமைதிக்கான நம் தாகத்தைத் தெரிந்து கொள்ளவும், உள்ளமைதியைப் பற்றிய நம் எதிர்பார்ப்புகளை விட்டுவிடவும் அவர் ஊக்கமளிக்கிறார். ஆழமான அர்த்தமும், சிந்திக்கத் தூண்டும் கதைகளும் நிறைந்த "உள்ளத்தின் குரல்" என்ற இப்புத்தகம் வாசகர்களுக்கு தொன்றுதொட்டு வரும் ஒரு செயல்முறையிலான அறிவு சார்ந்த விவேகத்தை அறிமுகப்படுத்துகிறது. "இவ்வழியைப் பின்பற்றுவதன் மூலம் நம்மைப் பற்றியும், நம்மைச் சுற்றி உள்ளவர்கள் பற்றியும், நம் வாழ்வைப் பற்றியும் நாம் புரிந்து கொள்வதில் ஆழமான மாற்றத்தை நம்மில் கொண்டுவர முடியும்" என்று பிரேம் ராவத் தெரிவிக்கிறார்.

Available in all libraries, bookstores in hard copies and in audibles.
www.Timelesstoday.com
www.premrawat.com

# KOKUVIL HINDU COLLEGE
## OLD STUDENTS' ASSOCIATION CANADA

இரா போசன விருந்துடன்,
மாபெரும் இன்னிசை நடன நிகழ்வு

APRIL
6
2024

# மகுடம்
# MAHUDAM 2024



Metropolitan Center- Banquet Hall In Scarborough.
3840 Finch Ave E, Toronto, ON M1T 3T4

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா

## நாமும் நமது இல்லமும் 647

# கனடாவில் அதிகரிக்கும் ஆதனவிலை

ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969




பொதுவாக கனடியர் ஒவ்வொரு ஏழு (7) வருடத்திற்கும், தமது இருப்பிடத்தை மாற்றுவது வழமையாக இருந்து வருகின்றது. ஆனால், அண்மையில் குறிப்பாக கடந்த இரு வருடங்களில் ஏற்பட்ட அதிக வட்டிவீத அதிகரிப்பும், விலை அதிகரிப்பும் இப்பொழுதும் இது நியாயமாக இருக்குமா? என்பது கேள்வி.

இன்றைய புள்ளி விபரங்களின் பிரகாரம் ஏழு வருடங்கள் நிச்சயமாக அதிகரிக்கும் என்று தெரியவருகின்றது. இதற்கு முக்கிய காரணமாக கனடியர்களின் வயது கூடிய வாழ்க்கை முறை, அதிக வட்டி வீதம்.

பொதுவாக கனடியர் தமது வாழ்வில் 4.5-5.5 ஆதனத்தை உரிமையாக்கியுள்ளனர். பொதுவாக 25 வயதில் தொடங்கி 65 வயதில் தமது இறுதி ஆதனத்தை வாங்குவதாகக் கொள்ளலாம்.

2021/2022இன் கணக்கின்படி 870,000 ஆதன உரிமையாளர்கள் தமது இருப்பிடத்தை மாற்றியுள்ளனர். ஏறக் குறைய 15 மில்லியன் மொத்த ஆதனங்களில் 870,000 கை மாறியுள்ளன. கனடியரில் ஆதனம் உரிமை கொள்வோர் 66.5% ஆகும். எனவே உரிமை கொள்ளும் ஆதனம் 10 மில்லியன்.

CMHCஇன் 2023இன் அறிக்கையின் பிரகாரம், 2021இல் தமது ஆதனத்தை காலி செய்தவர்கள் 13.5%.



இதே பெறுமதி 2020இல் 15.5%. அதாவது, 2% குறைந்துள்ளது. இதற்கு இன்னுமொரு காரணம், தகுந்த ஆதனத்தை கண்டுபிடிப்பதும், ஆதனத்தை வாங்குவதிலும் அடமானம் பெறுவதிலும் ஏற்படும் நிலைப்பாடும்.

இதனால் எதிர்காலத்தில நகரங்களை தவிர்ந்த பகுதிகளிற்கே கனடியர்கள் செல்லவேண்டிய நிலை ஏற்படலாம். இதனால் அல்பேட்டா மற்றும் அட் லாண்டிக் மாகாணங்களை எதிர்காலத்தில் கனடியர்கள் தெரிவு செய்யக்கூடிய சந்தர்ப்பங்களே அதிகமாகக் காணப்படலாம்.

முன்பு எல்லாம் ஒன்ராறியோ, பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணங்களே கனடியரின் முதல் இரு தேர்வுகளாகக் காணப்பட்டன. அத்துடன் இளைஞராக இருக்கும்போதே அதிகமாக இடம்மாறுவதனை விரும்புவர். ஆனால், கனடாவில் வயதானோரின் எண்ணிக்கை அதிகரிப்பதும் இடமாற்றம் தடைபடுவதற்கும் காரணமாகலாம்.

இப்பொழுதும் அதிகளவிலான வீடு/மனை நிர்மாணங்களைக் காணலாம். இவை வட்டிவீதம் 2%இலிருக்கும் போது விற்கப் பட்டு / வாங்கப்பட்டவையாகும். ஆனால், வட்டிவீதம் 5 அல்லது 6ஆக இருக்கும் போது நடைபெற்ற வியாபாரங்கள் அல்ல. இதனால், எதிர்காலத்தில் நிர்மாணம் செய்யப்படும் ஆதனங்களின் எண்ணிக்கையும் குறைவடையும். இதன் தொடர்ச்சியாக நான்கு அல்லது ஐந்து வருடங்களில் ஆதனப்பற்றாக் குறையை எதிர்பார்க்கலாம்.

இதனால் ஆதன விலையிலும், வாடகையி லும் அதிகரிப்பை எதிர்பார்க்கலாம். எது எவ்வாறாயினும் கனடியரில் ஒரு பகுதியினர் ஆதனம் வாங்குவதிலும், விற்பதிலும் நாட்டம் கொண்டே இருப்பர். அத்துடன் புதிதாக கனடாவிற்கு வரு வோரில் குறிப்பிட்ட பகுதியினர் நிச்சயமாக வாங்குவதனைத் தவிர்க்க முடியாது. எது எவ்வாறாயினும் ஆதன முதலீடு என்பது நீண்டகால எதிர்பார்ப்பு.

தகுந்த ஆதனத்தை தகுந்த இடத்தில் தமது வசதிக்கேற்ப, வாங்குவது நிச்சய மாக எதிர்கால வாழ்வை பிரகாசமாக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

* பேசி தீருங்கள், பேசியே வளர்க்காதீர்கள்.
* உரியவர்களிடம் சொல்லுங்கள், ஊரெல்லாம் சொல்லாதீர்கள்.
* நடப்பதைப் பாருங்கள், நடந்ததைக் கிளறாதீர்கள்.
* உறுதி காட்டுங்கள், பிடிவாதம் காட்டாதீர்கள்.
* விவரங்கள் சொல்லுங்கள், வீண்வார்த்தை சொல்லாதீர்கள்.
* தீர்வை விரும்புங்கள், தர்க்கம் விரும்பாதீர்கள்.
* விவாதம் செய்யுங்கள், விவகாரம் செய்யாதீர்கள்.
* விளக்கம் பெறுங்கள், விரோதம் பெறாதீர்கள்.
* சங்கடமாய் இருந்தாலும், சத்தியமே பேசுங்கள்.
* செல்வாக்கு இருந்தாலும், சரியானதைச் செய்யுங்கள்.
* எதிர் தரப்பும் பேசட்டும் என்னவென்று கேளுங்கள், எவ்வளவு சீக்கிரம் தீர்வுவரும் என்று பாருங்கள்.
* நேரம் வீணாகாமல், விரைவாக முடியுங்கள்.
* யாரோடும் பகையில்லாமல், புன்னகித்து வாழுங்கள்.
* வாழ்க்கை குறுகியது, ஆனால் அழகானது...



# மருத்துவ நுண்பரிசோதனைக்கூடத்தில் 'இணையவெளி தாக்குதல்'

கனடாவில் வாழும் பெரும் பான்மையோர் அநேகமாக "லைவ் லாப்ஸ்" (Life Labs) எனப்படும் மருத்துவ நுண்பரிசோதனைக் கூடத்தில் தங்களின் குருதிப் பரிசோதனை கள் (Blood test), சிறுநீர்ப் பரிசோதனை கள் (Urine test) உட்பட பலவிதமான மருத்துவ பரிசோதனைகளினை ஏற்கனவே பல தடவை செய்திருப்பர்.

இங்கு டிசம்பர் 17, 2019ஆம் ஆண்டுக்கு முன்பு மருத்துவ நுண்பரிசோதனைக் கூடத்தில் பரிசோதனை செய்த ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் $50 - $150 டொலர் வரை ஓர் சிறு தொகை நட்டஈடு வழங்கவேண்டும் என கனடாவின் நீதித் துறை வழங்கிய உத்தரவினைத் தொடர்ந்து அதற்குரிய மனுக் களினை எதிர்வரும் ஏப்ரல் 04, 2024க்கு முன்பு சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

"இணையவெளி தாக்குதல் மோசடி" (Cyber attack) மூலம் மின் கணினி மையத்தில் இரகசிய மாக வைத்திருக்க வேண்டிய பல வாடிக்கையாளர்களின் சில தகவல்கள் வெளியே கசிவதற்குக் காரணமாக இருந்த குற்றத்திற்காக $9.8 மில்லியன் டொலர் நட்ட ஈட்டுத்




தொகையினை கனடா முழுவதும் உள்ள இம்மருத்துவ நுண்பரிசோதனை கூடங்களில் ஏற்கனவே பரிசோதனைகள் செய்த சுமார் 15 மில்லியன் வாடிக்கை யாளர்களுக்கும் பகிர்ந்து வழங்கவேண்டும் என்ற உத்தரவு வழங்கப்பட்டு தற்போது அதன் நடவடிக்கைகள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

"Lifelabs Compensation" என பதிவு செய்து கூகிள் (Google) இணைய தளத்தினூடாக இவை பற்றிய முழு விபரங்களினையும் அறிந்து கொள்ளலாம்.

Detailed information and updates are available on the Settlement Website at https://lifelabssettlement.kpmg.ca

LIFELABSSETTLEMENT. KPMG.CA என்னும் இணையதள மின் அஞ்சல் மூலம் மிக இலகு வாக தங்களின் விண்ணப்பத்தினை ஐந்து நிமிடங்களில் சமர்ப்பித்து விடலாம்.

தங்களின் பெயர் விபரங்கள், விலாசம், தொலைபேசி இலக்கம், மின் அஞ்சல் முகவரி என இவற்றுடன் மட்டும் மாகாண மருத்துவ இலக்கத்தினையும் (Provincial Health Card Number) பதிவு செய்து அனுப்பி வைக்கவேண்டும்.

இவ் இணையத்தளத்தில் ஒரு பக்க விண்ணப்பப்படிவத்தினை பதிவிறக்கம் செய்து நிரப்பி, தபால் மூலமோ அல்லது மின் அஞ்சல் மூலமோ இங்கு குறிப்பிடப் பட்ட பின்வரும் முகவரிக்கு அனுப்பியும் வைக்கலாம். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து நேரடியாகவும் தகவல்களினை பெற்றுக் கொள்ளலாம்.

KPMG INC.,
C/O LifeLabs Claims Administrator
600 boul. de Maisonneuve West,
Suite 1500,
Montréal, Québec, H3A 0A3
Phone : 1-833-494-0108
மின் அஞ்சல்: lifelabssettlement@kpmg

தபால் மூலமோ? அல்லது இணையதள மூலம் (E .Money Transfer) தங்களுக் குரிய பணம் அனுப்பி வைப்பது என்றதொரு கேள்விக்கும் அங்கு பதில் வழங்கவேண்டும். தங்களை தேடி அவரவர் பெயரில் இச்சிறு தொகை பணம் வந்து சேரும். சிறு தொகையாக இருந்தாலும் தவறவிடாதீர்கள். விண்ணப்பிக்கும் கடைசி திகதி ஏப்ரல் 04, 2024.

# என்னை பாதித்த புத்தகங்கள்

## நடிகை ரோகிணி





"புத்தகங்கள் இல்லாத வீடு ஜன்னல்கள் இல்லாத அறை போன்றது" என்கிறார் எழுத்தாளர் ஹென்றிச் மான் "புத்தகத்தைப்போல விசுவாசமான நண்பர் யாரும் இல்லை" என்கிறார் எழுத்தாளர் எர்னஸ்ட் ஹெமிங்வே. அப்படி தன்னைக் கவர்ந்த, தன்னைப் பாதித்த புத்தகங்கள் பற்றி, கடந்த இதழில் பகிர்ந்துகொண்ட சாருநிவேதிதாவைத் தொடர்ந்து இம்முறை பேசுகிறார், திரைப்பட நடிகை ரோகிணி.

### மீட்சி _ வோல்கா

சமீப காலத்தில் என்னை மிகவும் பாதித்தவை தெலுங்கு எழுத்தாளர் வோல்கா எழுத்துகள். அவருடைய எல்லா எழுத்துகளுமே எனக்கு பிடிக்கும். இவருடைய பல கதைகள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அதில் மிக முக்கியமானது, எல்லோரும் படிக்க வேண்டியது என்று, 'மீட்சி' என்ற சிறுகதை தொகுப்பை சொல்வேன். ஒரு பெண்ணின் பார்வையில் இருந்து, இந்த சமூகம் அவளை எப்படியாக பார்க்கிறது, சமூகத்தில் அவளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற நிலை என்ன, அதிலிருந்து அவள் ஏன் மீண்டு வரவேண்டும் என்பதைப் பற்றி வோல்கா இந்த கதைகளில் பேசுகிறார். இராமாயணத்தில் இராவணன் மனைவி மண்டோதரியும் அவனது தங்கை சூர்ப்பனகையும் பேசிக்கொள்வதில் இருந்து ஒரு கதை தொடங்குகிறது. சீதையை சந்திக்க செல்லும் மண்டோதரி, அப்போது சீதை அலங்காரமே இல்லாமல் உட்கார்ந்திருப்பதை பார்க்கிறார். "நீ ஏன் இப்படி அலங்காரமே இல்லாமல் இருக்கிறாய்?" என்று சீதையிடம் கேட்கிறார். இந்தக் கேள்வியை, இராவணனுக்காக தன்னை அலங்காரம் செய்து அழைத்து செல்லவே மண்டோதரி வந்துள்ளார் என்று சீதை புரிந்துகொள்கிறார். ஆனால், "ராமன் வந்து உன்னை இங்கே இருந்து அழைத்துச் செல்வார் என்று நீ உறுதியாக நம்பும்போது, ஏன் உன்னை நீ அலங்காரம் செய்துகொள்ளக் கூடாது. இந்த அலங்காரம் என்பது உன்னுடைய கணவனுக்காக மட்டும் நீ செய்து கொள்வதா? உனக்காக செய்துகொள்ளக் கூடாதா?" என்று மண்டோதரி கேட்பார். ஒரு பெண்ணாக இந்த கேள்வியை மிக முக்கியமானதாக நான் நினைக்கிறேன்.

இராவணன் கொல்லப்பட்ட பிறகு விபீசணன் பதவியேற்பு நடக்கும். ஆரியர்கள் வழக்கப்படி மண்டோதரி விதவைக் கோலம் பூண வேண்டும். அப்போதுதான் விபீசணனுக்கு பட்டம் கட்ட முடியும். இதனால், விபீசணன் அண்ணியிடம் போய் கேட்பார். அப்போது மண்டோதரி சொல்வார்: "நம் திராவிட குலத்தில் இதுபோல் பூவும் பொட்டும் எடுக்கும் வழக்கம் இல்லையே. நம்முடைய அம்மாவோ பாட்டியோ பூவும் பொட்டும் இல்லாமல் இருந்து நீ பார்த்திருக்கிறாயா?" என்பார். கடைசியில், பூவும் பொட்டும் எடுக்காமலேதான் மண்டோதரி காட்டுக்குள் செல்வார் என்பதாகவே இந்த கதை முடியும்.



திராவிடர்களுக்கு இருந்த பழக்க வழக்கம் என்ன? ஆரியர்கள் என்ன பழக்க வழக்கங்களை புகுத்தினார்கள் என்பதையும் இந்தக் கதைகளில் வோல்கா பேசுகிறார். இலங்கையில் இருந்து அயோத்தி திரும்பிய பிறகு ராமனால் சீதை மீண்டும் காட்டுக்கு அனுப்பப்படுகிறார். அப்போது சூர்ப்பனகையை சீதை சந்திப்பார். அப்போது சீதையைப் பார்த்து சூர்ப்பனகை கேட்பார்: "ராமனைக் காதலித்ததால் உனக்கும் எனக்கும் என்ன கதி ஏற்பட்டுள்ளது பார்த்தாயா?"

ஓர் ஆணாதிக்க சமூகம் கற்பு என்பதை எப்படி பார்க்கிறது, அதை பெண்ணையும் எப்படி நம்ப வைத்தது என்பதையும் வோல்கா கதைகள் பேசுகின்றன.

### சதத் ஹசன் மாண்ட்டோ சிறுகதைகள்

இந்தியா _ பாகிஸ்தான் பிரிவினையின் போது நடந்த விடயங்கள் அனைத்தையும் மிக அழுத்தமாக பதிவு செய்திருக்கிற கதைகள், சதத் ஹசன் மாண்ட்டோ சிறுகதைகள். அதில் மிக முக்கியமானது, டோபா டேக்சிங் என்ற கதை. பிரளயன் நெறியாள்கையில் இந்த சிறுகதை சென்னையில் நாடகமாக அரங்கேற்றப்பட்டது. அதில் நான் நடித்துள்ளேன். ஓர் எல்லைக் கோட்டை வரைந்து, நீ இந்தப் பக்கம், நீ அந்தப் பக்கம் என்று, மக்களை அந்த மக்கள் வளர்ந்த சூழலில் இருந்து பிடிங்கிப் போடும்போது ஏற்படும் வலியை, அபத்தத்தை, ஒரு எள்ளலுடன் பேசும் கதை இது.

சதத் ஹசன் மாண்டோவின் தாக்கம் இன்றும் இந்தியா முழுவதும் எல்லா எழுத்தாளர்களிடமும் திரைத்துறை கலைஞர்களிடமும் இருக்கிறது. மாண்டோவின் சுயசரிதையை நடிகை நந்திதா தாஸ் திரைப்படமாகவே எடுத்திருக்கிறார். சதத் ஹசன் மாண்டோவின் பெரும்பான்மை எழுத்துகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகியுள்ளன.

### கட்டடக் கலைஞர் லாரி பேக்கர் நூல்கள்

கட்டடக் கலைஞர் லாரி பேக்கரின் எல்லா நூல்களையுமே நான் படித்துள்ளேன். அனைத்து நூல்களுமே என்னைக் கவர்ந்தவை.

பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில், குறிப்பாக சுதந்திரப் போராட்ட காலகட்டத்தில், பிரிட்டினில் இருந்து சேவை செய்வதற்காக இந்தியா வந்தவர் லாரி பேக்கர். இந்தியாவில் முதலில் இமாச்சலப் பிரதேசத்தில்தான் இருந்தார். அவரது மனைவி ஒரு மருத்துவர். தொழு நோயாளிகளுக்கு மருத்துவம் பார்த்து வந்தார். லாரி பேக்கர் அப்பகுதி மக்களுக்கு வீடுகள் கட்டும் பணியை ஒரு தொண்டாகவே செய்து வந்துள்ளார்.

அப்போது லாரி பேக்கருக்கு இந்திய கட்டடக் கலை மிகவும் பிடித்துவிட்டது. ஒரு வீடு கட்டும்போது, அதன் அருகாமையில் கிடைக்கும் பொருட்களை வைத்தே வீடு கட்டும் அன்றைய இந்திய கட்டடக் கலையை அற்புதமான கட்டடக் கலை என்று அவர் குறிப்பிடுகிறார். ஆனால், இன்று அதிலிருந்து இந்திய மக்கள் நீண்ட தூரம் விலகி வந்துவிட்டனர். எங்கோ இருந்து சிமெண்ட் வருகிறது, வேறு எங்கோ இருந்து மணல் வருகிறது, இன்னொரு இடத்தில் இருந்து கம்பிகள் வருகிறது; இதனால் அந்த வீட்டின் பலம் குறைவதுடன் வீடு கட்டும் செலவும் அதிகரிக்கிறது என்கிறார் லாரி பேக்கர்.


இமாச்சலில் இருந்து கேரளாவுக்கு வருகிறார் லாரி பேக்கர். மிக மலிவாகவும் அதே நேரம் மிகத் திடமாகவும் வீடுகள் கட்ட முடியும் என்பதை அங்கே அவர் கண்டுபிடித்து அதை செயல்படுத்துகிறார். ஏசி இல்லாமல் ஆனால் மிக குளுமையாகவும், காற்றோட்டமாகவும் இருக்கும்படி அவர் கட்டிய வீடுகள் உள்ளன. அதைப் பார்த்து கேரளா அரசாங்கமே பல வீடு கட்டும் திட்டங்களை அவரிடம் ஒப்படைக்கிறது. கேரளாவில் அவர் கட்டிய வீடுகள் இன்றும் திடமாக உள்ளன. லாரி பேக்கர் வீடுகள் என்றே அவை அழைக்கப்படுகின்றன.

லாரி பேக்கர் கட்டடங்கள் பற்றிப் பேசினாலும் அவை கட்டடங்கள் பற்றி மட்டுமானவை அல்ல என்பதுதான் அவரது எழுத்துகளை அனைவரும் படிக்கும்படி செய்கிறது.

### அவதூறுகளின் காலம் _ இளம்பிறை

இது ஒரு கவிதை நூல். ஆனால், இந்த ஒரு நூல் மட்டுமல்லாமல் இளம்பிறையின் எல்லா கவிதை நூல்களுமே எனக்கு விருப்பமானவைதான். ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பற்றி பேசுவது, ஒரு தனி மனிதனின் வாழ்க்கையைப் பற்றி பேசுவது, எளிய மனிதர்களின் வாழ்க்கையைப் பேசுவது என்ற வகையில் மிக அருமையான கவிதைகள் இளம்பிறையினுடையவை.

நான் எடுக்கப்போகும் ஒரு குறும்படத்தில் இளம்பிறை கவிதைகளை நான் பயன்படுத்தப் போகிறேன். அந்தளவு இளம்பிறை கவிதைகள் எனக்கு பிடிக்கும். மிக மனஅழுத்தத்துக்கு ஆளாகி தற்கொலை செய்துகொள்ளும் ஓர் இடத்துக்குப் போகிற பெண்களைப் பற்றி பேசும் குறும்படமாக அது இருக்கும். இந்த குறும்படத்தில் எழுத்தாளர் ஆதவன் தீட்சண்யாவின் ஒரு கவிதையையும் நாங்கள் பயன்படுத்த இருக்கிறோம்.





### மீசை என்பது வெறும் மயிர் - ஆதவன் தீட்சண்யா

ஆதவன் தீட்சண்யாவின் அனைத்து சிறுகதைகளும் மிக முக்கியமானவை. அதேநேரம், அதிலும் மிக முக்கியமானதாக நான் நினைப்பது, 'மீசை என்பது வெறும் மயிர்' என்னும் கதைதான். மீசையை முறுக்குவதுதான் வீரம், பெண்களைவிட அல்லது தாழ்த்தப்பட்டவர்களைவிட நீ பெரிய வீரன் என்றால் மீசையை முறுக்கு என்றுதான் நமக்கு சொல்லப்பட்டுள்ளது. இதனால் தங்கள் வீரத்தை காண்பிக்க விதவிதமான மீசைகளை வைத்துக்கொள்கிறார்கள். இந்நிலையில், மீசை என்பது ஒன்றுமே கிடையாது. அது வெறும் மயிர்தான்

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# நானிலம் போற்றும் நட்பு - 38



- அகணி -
authorakani@gmail.com

"ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்." (அதிகாரம் தீ நட்பு, குறள் 818) என்ற குறளிற்கு "முடியும் செயலையும் முடியாதபடி செய்து கெடுப்பவரின் உறவை, அவர் அறியுமாறு ஒன்றும் செய்யாமலே தளரச் செய்து கைவிட வேண்டும்" என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"செய்ய முடிந்த செயலைக்கூட செய்யாமல் நடிப்பவர் நட்பைச் சொல்லாமலே விட்டுவிட வேண்டும்.." என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"தம்மால் முடியும் காரியத்தையும், முடியாமல் கெடுப்பவரின் நட்பைச் சொல்லாமலே விட்டுவிட வேண்டும்" என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"நிறைவேற்றக் கூடிய செயலை, நிறைவேற்ற முடியாமல் கெடுப்பவரின் உறவை, அவருக்குத் தெரியாமலேயே மெல்ல மெல்ல விட்டுவிட வேண்டும்." என்று உரையாசிரியர் கலைஞர் அவர்கள் உரை தந்துள்ளார்.

தடைகள் போட்டு செயலை நிறைவேறாமல் செய்யும் நட்பை கைவிட்டு விடவேண்டும் என்று இந்தக் குறள் எடுத்துக் கூறுகிறது.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் முப்பத்தேழாவது பாடலைக் கவனிப்போம்.

இப்பாட்டு பாலை பாடிய பெருங் கடுங்கோ என்னும் புலவரால் பாடப்பட்டது. தலைவன் பிரிவால் வருந்திய தலைவிக்குத் தோழி ஆறுதல் உரைத்தது. இது பாலைத்திணை சார்ந்தது.

"நாண்இல மன்றஎம் கண்ணே, நாள்நேர்பு
சினைப்பசும் பாம்பின் சூல்முதிர்ப்பு அன்ன
கனைத்த கரும்பின் கூம்புபொதி அவிழ
நுண்உரை அழிதுளி தலைஇய
தண்வரல் வாடையும் பிரிந்திசினோர்க்கு அழலே."

இந்தப் பாடலுக்கான பொருளினைக் கவனிப்போம்.

தலைவர் உன்னிடம் காதல் மிகுதியும் கொண்டவர். ஆதலால் விரைவில் மகிழ்ச்சியைக் கொடுத்தாலும் கொடுப்பர். பெண் யானையின் பசியைப் போக்கும் பொருட்டு. நீண்டகையையுடைய ஆண் யானையானது மெல்லிய கிளையுடைய யாம் என்னும் மரத்தின் பட்டையை உரித்து அதில் உள்ள நீரை அருந்தச் செய்யும். அன்பை வெளியிடுவதற்கு இடமாக உள்ளது. அவர் போன பாலைவன வழி.

பிரிந்து போன தலைவன் எப்பொழுது வருவான். விரைந்து வந்து என் துயரத்தைத் தூரத்தில் எடுத்து வீசுவானா? அல்லது நான் கண்ணீர் சிந்திக் கலங்கி நிற்கும்படி காலந்தாழ்த்தி வருவானோ? என்றெல்லாம் எண்ணி ஏங்கினாள் தலைவி.

இவளுடைய ஏக்கத்தைக் கண்ட தோழி அவள் மனம் ஆறுதல் அடையும்படி அன்புரைகள் பலவற்றை எடுத்துக் கூறினாள். 'தலைவியே நீ சிறிதும் வருந்தாதே நம் தலைவர் வாக்குத் தவறமாட்டார். அவர் சொன்னபடியே நடப்பார். அவர் சென்ற வழியில் உள்ள காட்சிகள். அவரை விரைவில் நம்மிடம் திரும்பச் செய்யும். அக்காட்சிகளிலே ஒன்றை மட்டும் சொல்லுகிறேன்.

பாலை நிலத்தின் வழியாகத்தான் அவர் செல்வார். அங்கே அருந்துவதற்குக்கூடத் தண்ணீர் கிடைக்காது. அங்கு வாழும் உயிர்களுக்கு உணவும் கிடைக்காது. இந்தப் பாலைவனத்திலே பசியால் வருந்தும் பெண் யானையின் துன்பத்தைக் கண்டு ஆண் யானை துடித்துப் போகும். தண்ணீரைக் கொடுத்தாவது அதன் பசியைக் கொஞ்சம் தணிக்க வேண்டும் என்று தவியாய்த் தவிக்கும். தண்ணீரைத் தேடி அலையும். நிலத்திலே தண்ணீர் கிடைக்காது. அங்கு வளர்ந்து நிற்கும் யாம் என்னும் அந்த மரத்தின் பட்டையை உரிக்கும். அப்பட்டையிலிருந்து தண்ணீர் வடியும். அத்தண்ணீரைத் தன் துணையான பெண் யானையை அருந்தச் செய்யும். இது அங்கு நடக்கும் காட்சிகளில் ஒன்று.

நம் காதலர் செல்லும்போது இக்காட்சியைக் காணாமல் இருக்க மாட்டார். கண்டவுடன் அவர் உள்ளத்தில் உறைந்திருக்கும் அன்பு அவரை இளகச் செய்யும். ஆகையால் அவர் போன இடத்தில் தங்கி விடமாட்டார். விரைவில் சென்ற காரியத்தை முடித்துக் கொண்டு திரும்புவார். உன்னை வருந்தாமல் வாழச் செய்வார். ஆகையால் உன் உள்ளத்தில் கவலைப்பட வேண்டாம். அன்பு மிகுந்த அவர், அந்த இயற்கைக் காட்சியால் விரைவில் திரும்புவார் என்று தோழி சமாதானம் கூறினாள்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் முப்பத்தெட்டாவது பாடலைக் கவனிப்போம்.

இது கபிலர் பாட்டு. பொருள் தேடப் போயிருக்கின்றான் தலைவன். தலைவி அவன் பிரிவுக்காக வருந்துகின்றாள். தோழி அவள் வருத்தத்திற்குக் காரணம் என்னவென்று கேட்டாள். அவளுக்குத் தலைவி தனது துயரத்திற்குக் காரணம் இன்னது என்று உரைத்தாள். இது குறிஞ்சித் திணை சார்ந்தது.




"கான மஞ்ஞை அறையீன் முட்டை
வெயில்ஆடு முசுவின் குருளை உருட்டும்,
குன்ற நாடன் கேண்மை என்றும்
நன்றுமன்! வாழி தோழி! உண்கண்
நீரொடு ஒராங்குத் தணப்ப
உள்ளாது ஆற்றல் வல்லு வோர்க்கே."

இந்தப் பாடலுக்கான பொருளினைக் கவனிப்போம்.

வாழிதோழி வாழ்க தோழியே. காட்டில் உள்ள மயில் கற்பாறைகளிலே ஈன்ற முட்டைகளை வெய்யிலிலே விளையாடிக் கொண்டிருக்கும் குரங்கின் குட்டிகள் உருட்டி விளையாடிக் கொண்டிருக்கின்ற. மலை நாட்டையுடைய தலைவனது நட்பானது அவன் பிரிந்ததனால் மையுண்ட கண்களிலிருந்து ஒழுகும். ஒரேயடியாக நினைக்காமல் ஆற்றல் பொறுத்துக் கொண்டிருக்கும் வல்லமையுள்ளவர்களுக்கு என்றும் நன்மையாக இருக்கக் கூடும்.

காதலனை எண்ணிக் கவலைப்பட்டிருந்த தலைவியின் கண்களிலிருந்து அவள் எவ்வளவுதான் அடக்கினாலும் அடங்காமல் நீர் பெருக்கெடுத்து ஓடியது. இதைக் கண்டாள் தோழி வருந்தும் தலைவியைப் பார்த்துக் கீழ் வருமாறு கேட்டாள்.

அவர் போயிருப்பதும் உனது நன்மைக்காகத் தானே. உன்னை மணந்து கொள்ளும் பொருட்டுப் பொருள் ஈட்டத்தானே போயிருக்கிறார். அவர் நல்ல காரியத்தை நாடிச் சென்றிருப்பதற்காகச் சிந்தையிலே மகிழ்ச்சி கொள்ள வேண்டும்.

'தோழியே, நீ கேட்பது சரிதான். தலைவன் உண்மையும், உறுதியும் உள்ளவன்தான். அவனுடைய நாட்டிலே உள்ள மலைச் சோலைகளிலே வாழும் மயில் கற்பாறைகளிலே முட்டையிட்டிருக்கும். அந்த முட்டைகளை வெயிலிலே விளையாடிக் கொண்டிருக்கும் குரங்குக் குட்டிகள் பந்து போல் உருட்டி விளையாடும். இத்தகைய குன்றுகள் அமைந்த நாட்டையுடையவன். அவன் என்னைவிட்டுப் பிரிந்ததைப் பற்றிய துன்பத்தை நானும் பல நாட்கள் பொறுத்துப் பார்த்தேன். ஆனால் இப்பொழுது பொறுக்க முடியவில்லை.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் முப்பத்தொன்பதாவது பாடலைக் கவனிப்போம். இது ஔவையார் பாட்டு. தலைவன் பிரிவினால் வருந்தினாள் தலைவி. அவளை "நீ வருந்தாதே" என்று வற்புறுத்தினாள் தோழி. அதற்குத் தலைவி உரைத்த மொழியைக் கூறுகின்றது இப்பாட்டு. இது பாலைத்திணை சார்ந்தது.

"வெம்திறல் கடுவளி பொங்கர்ப் போந்தென
நெற்றுவிளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்
மலைஉடை அரும்சுரம் என்பது நம்
முலையிடை முனிநர் சென்ற ஆறே,"
இந்தப் பாடலுக்கான பொருளினைக் கவனிப்போம்.

நமது மார்பின் இடையிலே உறங்கி இன்பம் நுகர்தலை வெறுத்தவர். பிரிந்து போயிருக்கும் வழியானது. வெப்பமுள்ள வலிமையான விரைந்து வீசும் காற்று மரக் கிளையிலே வந்து தாக்குவதனால் வாகை மரத்திலே நெற்றாக முற்றியிருக்கின்ற காய்ந்த வற்றல்கள். ஒன்றோடு ஒன்று உரசி ஒலிக்கின்ற மலை மலைகளுடைய நடப்பதற்கு அரிய வழி என்று கூறுவர்.


தலைவன் பொருள் தேடப் பிரிந்து போயிருக்கின்றான். அப்பிரிவைப் பொறுக்க முடியாமல் தலைவி வருந்துகின்றாள்.

இதைக் கண்ட தோழி கேட்கின்றாள். 'நீ வருந்துவது ஒழுங்கில்லை. அவன் வரும் வரையிலும் பொறுத்துக்கொண்டு இருக்க வேண்டும். உனது துன்பம் ஊரார்க்கு நகைப்பைத் தரும். உன் காதலனுக்கும் பழிப்பை உண்டாக்கும். ஊரார் நகைக்கும் படியும் நடந்து கொள்ளுவது கற்புடைய பெண்களுக்குப் பொருந்தாது. காதல் உள்ள பெண்களுக்கும் ஏற்றதாகாது என்று அறிவுரை கூறினாள்.

'தோழியே! நான் என் பொருட்டு வருந்தவில்லை. என்னுடைய இன்பத்தை இழந்து


(தொடர்ச்சி 15ஆம் பக்கம்...)

# கனடாவின் கல்வி வரலாறு




கடந்த இதழ் தொடர்ச்சி

1876ஆம் ஆண்டின் 'இந்திய சட்டக் கோவை'யின்படி பழங்குடியினருக்கான வதிவிடப் பாடசாலைகளை அரசாங்கம் கட்டமைப்பதற்கு இதில் உள்ள பல சட்டப் பிரிவுகள் வழிவகுத்துள்ளன. ஆனால் இந்தப்பாடசாலைகளில் இடம்பெற்ற பாலியல் துன்புறுத்தல்கள், தண்டனைகளாக உடலியல் சித்திரவதைகள்,



கொலைகள் என்பன இடம்பெற்றுள்ளமையை விசாரணை செய்த அரசாங்க ஆணைக்குழுவின் அறிக்கை 1996இல் வெளியீடு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து பழங்குடியினருக்கான சக்தியைத் திரட்டுவதற்கான செயற்றிட்டத்தை 1998 இல் அரசாங்கம் பிரகடனப்படுத்தியது. இதில் பழங்குடியினரின் பிரித்தானிய வட அமெரிக்க சட்டத்தின்கீழ் குடியேற்ற நாட்டு அரசாங்கத்திற்கு 'இந்தியர்கள் மற்றும் அவர்களுக்கான நிலஒதுக்கீடு'க்கு பொறுப்புக் கையளிக்கப்பட்டமை, பழங்குடியினரின் கல்வியில் ஒரு சிக்கலான நிலையை ஏற்படுத்தியது. அவர்களது கல்விக்கான நிதியுதவி இரண்டு நிறுவனங்களுக்குள் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டது.

1. கத்தோலிக்கப் பாடசாலைகள்
2. பிள்ளைகள் காப்பகங்களை உடைய பாடசாலைகள்

இந்த உதவிகள் நேரடியாக பழங்குடியினருக்குக் கிடைக்காதமையால் அவர்களது கல்வியில் பாராமுகம் ஏற்படுத்தப்பட்டது. வதிவிட பாடசாலைகளுக்கு வராத பிள்ளைகளுக்குக் கல்வி மறுதலிக்கப் பட்டிருந்தது. பழங்குடியினருக்கு இழைக்கப்பட்ட மிகப்பெரும் அநீதியாக குடியேற்ற நாட்டின் பழங்குடியினருக்கான அத்தியட்சகராக இருந்த டங்கன் கம்பல் என்பவரே பெருமளவு அநீதியிழைத்தவராக வரலாற்றில் பதிவாகியுள்ளார். அதாவது இந்த நாட்டின் பழங்குடியினரின் பங்களிப்பு தங்களுக்குக் கிட்டவில்லை என்ற காரணத்தைக் காட்டி அவர்களை அழித்தொழிக்கவும் அவர்களுக்கான வாய்ப்புக்கள் வசதிகளை மறுதலிக்கவும் காரணராக அவர் திகழ்ந்தார். 1913-1932 வரை பதவியில் இருந்த டங்கன் கம்பல் ஸ்கொட் என்பார் பழங்குடியினருக்கான விவகார சேவையில் அவரே பழங்குடியினரின் பல விழாக்களின் செயற்பாடுகளையும் நடைமுறையில் இருந்த இந்தியரின் 1820ஆம் ஆண்டின் அரசியல் சட்டத்தையும் இல்லா தொழித்தவர் ஆவார்.

"நான் இந்தியரின் பிரச்சினையில் இருந்து விடுபடவேண்டும். நான் இந்தியரின் பிரச்சினையை ஒரு காரணமாக நினைக்கவில்லை, ஒரு வர்க்கத்தினர் தாமாகவே தங்கள் காலில் நிற்கக் கூடியவர்களுக்கு இந்த நாடு தொடர்ந்து பாதுகாப்பளிக்க வேண்டியதில்லை. எங்கள் எண்ணப்பாங்கு இந்த நாட்டில் ஒரு தனி இந்தியன் இல்லாதநிலை உருவாகவேண்டும். அரசியலில் இந்தியர் ஒருவரும் உள்வாங்கப்படக்கூடாது. இந்தியன் என்னும் கேள்விக்கே இடமில்லை, இந்திய திணைக்களம் ஒன்று என்று இல்லை, அதுதான் முழுவதுமான எண்ணக்கரு" (McGillivray, 1997, p. 143) என்பதனை நோக்கும்போது இந்த நாட்டில் வந்து குடியேறியவர்கள் இங்கு முன்னரே வாழ்ந்து வருபவர்களை மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு மட்டுமல்ல மனிதர்களாகவே பார்க்கவில்லை. அவர்களின் தனித்துவம் பேணப்படக்கூடாது, அவர்கள் தங்கள் மொழி, பண்பாட்டை மறந்து ஆங்கில அல்லது பிரான்சிய பண்பாட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே நோக்கமாகக் காணப்பட்டது. இது இன்றைய பழங்குடியினரின் முக்கிய பிரச்சினைகளுக்குக் காரணமாக



அமைந்தது என்பதனைப் பலரும் உணரத் தலைப்பட்டுள்ளனர். அதனால் கனடியப் பிரதமராக இருந்த ஸ்ரீபன் காப்பர் இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை கண்டு தம்முன்னோர் செய்த தவறுக்காக யூன் 11, 2008இல் பகிரங்க மன்னிப்புக் கோரியிருந்தார். கத்தோலிக்க ஆலயங்களால் நிர்வகிக்கப்பட்ட விடுதிப் பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டிருந்த பழங்குடியினரின் பிள்ளைகளுக்குக் கொடுமைகள் இழைக்கப்பட்டுள்ளதோடு மட்டுமன்றி அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் மரணத்தை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. மதகுருமாரே தண்டனைகளை வழங்கியிருந்தனர். பற்களைப் பிடுங்கியெடுத்தல், மின்சாரத்தைப் பாச்சுவதற்கு ஊசிகளை நகங்களில் ஏற்றுதல் போன்ற கொடுமைகள் இழைக்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான பிள்ளைகள் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர். ஆங்கிலேயே ஆதிபத்தியவாதிகளால் கனடாவிலுள்ள அனைத்து செவ்விந்தியர்களையும் ஒழித்தழிக்கவேண்டும் என்னும் எண்ணம் மேலோங்கியிருந்தது. நொவம்பர் 09, 1992இல் ஆரம்பமான விசாரணைகள் 1941 தொடக்கம் 1972ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற பாலியல், உடலியல் தண்டனைகள், சித்திரவதைகள் சந்தேகத்திற்கிடமான இறப்புக்கள் பற்றியதாக அமைந்திருந்தது. அண்மைக் கால வரலாறுகளை The Fifth Estate என்னும் காணொளிச் செய்தியறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. 1200 ஆதாரங்களை ஆவணப்படுத்தியுள்ளனர். ஆனால் இந்த அறிக்கைகளை கணக்கில் எடுக்காமல் 2008 தொடக்கம் 2014வரை அரசாங்கம் தவிர்த்தே வந்துள்ளது.

இந்தப் பாடசாலையில் மட்டும் இடம்பெற்றவற்றுள் பெரும்பாலானவை உடலியல் ரீதியாக இது தொடர்பாக என்.டி.பி. பிரதிநிதி சார்ளி அங்கஸ் (Charlie Angus) ஒன்ராறியோ வடக்கில் உள்ள சென்ற். அந்தனிஸ் இந்திய வதிவிடப் பாடசாலையில் இடம்பெற்ற இக்கொடுமைகள் பற்றி விசாரணைகளை ஏழு ஆண்டுகளாக மேற்கொண்டார். அப்பாடசாலையின் அதிபர் அங்கு பேணப்பட்ட அறிக்கைகளை காட்டாமல் மறைத்துள்ளமை வெளிப்பட்டது மேலும் சந்தேகங்களை வலுவாக்கியமையினால் அவர்கள் கத்தோலிக்க தேவாலயத்தில் பேணப்படும் இரகசிய பதிவேடுகளைப் பார்வையிட மறுத்ததோடு அவற்றை மறைந்துள்ளனர் என்பதனை அறிந்துள்ளனர். அந்தப்பாடசாலை தமக்கெனவே மின்னியல் கதிரையைத் தயாரித்து வைத்து மாணவர்களுக்கு மின்சாரத்தை பாய்ச்சிச் சித்திரவதை செய்துள்ளனர். தப்பியோடிய மூன்று மாணவர்களை பிடித்துவந்து இவ்விதமாகக் கொண்டுள்ளமையும் இருபது ஆண்டுகள் கழிந்து ஓகஸ்ற் 03, 1993இல் பொலிசாரின் விசாரணையில் அதில் தப்பிப்பிழைத்த கதைகளைச் சொல்லியுள்ளனர். இதில் உயிர் பிழைத்தவர்களில் ஒருவர் தனது மார்பகத்திலும் வயிற்றிலும் இறுகப்பிடித்து தனது இரண்டு கால்களுக்கும் இடையே போட்டு என்னை படிகளில் இழுத்துச் சென்றார் ஒரு கத்தோலிக்க சகோதரி (nun) "உனக்கு உள்ளே உள்ள பிசாசை உனக்குத் தெரியும், அதனால் இந்த வழியில் அவர்கள் பிசாசை வெளியேற்ற முயற்சித்தார்கள்" எனக்குறிப்பிட்டுள்ளமை கத்தோலிக்க தேவாலய விடுதிப்பாடசாலைகளில் நடந்தேறிய கொடுமைகள் 1950க்குப் பின்னரான காலங்களிலும் இடம்பெற்றுள்ளமை கனடிய வரலாற்றில் கறைபடிந்தகாலமாகவே காணப்படுகின்றது. இவ்விதமாகப் பாதிக்கப்பட்டு உயிர் பிழைத்தவர்களுக்கு நட்ட ஈடாக கனடிய அரசாங்கம் 2.3 மில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளது.

## வதிவிடப்பாடசாலைகள்


வதிவிடப்பாடசாலைகளுக்குக் கட்டாயமாக பெற்றோரிடம் இருந்து அவர்களின் விருப்பத்திற்கு மாறாகப் பறித்து எடுத்து வரப்பட்டனர். இதற்கு இராணுவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் பலர் வீடு திரும்பவே இல்லை என்னும் உண்மை இன்று வெளிச்சத்திற்கு வருகின்றது. பல்வேறு இடங்களில் அமைந்திருந்த வதிவிடப்பாடசாலைகளில் அடையாளமிடப்படாத மனித புதைகுழிகளைத் தோண்டி அவற்றில் பாடசாலைப் பிள்ளைகள் புதைக்கப்பட்டுள்ளமை அம்பலமாகி வருவதனைப் பத்திரிகைகள் தொலைக்காட்சிகள் மூலம் அறியமுடிகின்றது.





# என்னை...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

என்னும் இடத்தில் இருந்து பேசுகிறார், ஆதவன் தீட்சண்யா.



கதைகள், கவிதைகள் போலவே ஆதவன் தீட்சண்யாவின் கட்டுரைகளும் மிக முக்கியமானவை. அந்தக் கட்டுரைகளில், வரலாற்றுக்குள் போய், அன்றைய நிகழ்வுகள் தந்த பாடத்தின் அடிப்படையில் இன்றைய நிகழ்வுகளை ஆராய்ந்து எழுதியிருப்பார். வரலாற்றை தெரிந்துகொண்டு, அதனடிப்படையில் நிகழ்காலத்தை புரிந்துகொண்டால்தான், எதிர்காலத்தை நாம் தீர்மானிக்க முடியும். அந்தவகையில், ஆதவன் தீட்சண்யாவின் கட்டுரைகளும் என்னை பாதித்தவை.

## மரப்பாலம் _ கரன் கார்க்கி

கரன் கார்க்கியின் எல்லா எழுத்துகளும் இந்தியாவில் மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் எப்படி ஏற்பட்டது என்பதை பேசுபவை. ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்டபோது, தங்கள் தேவைக்காக, தமிழ்நாட்டில், குறிப்பாக வட சென்னையில் தலித் மக்களை எப்படியெல்லாம் வேலை வாங்கியிருந்தனர், எதற்காகவெல்லாம் பயன்படுத்திக்கொண்டனர் என்பதை கதையோட்டத்துடன் இந்த நாவல் பேசுகிறது. எழுத்தாளர், இதற்காக அந்த காலகட்டத்தைப் பற்றி பல ஆய்வுகள் செய்து இந்த நாவலை எழுதியுள்ளார் என்பதை படிக்கும்போது நம்மால் உணர முடிகிறது.

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom with storage room bsmt for rent. Sep. entrance, laundry, kitchen & 1 parking. Close to all facilities. Avail. immediately.
**416.519.1016/647.990.3879**

**MCCOWAN & ELLESMERE**
2 bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. No smoking & no pets. Avail. March 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.761.7048**

**ROSSLAND & CHURCH ST. (Ajax)**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to School. No smoking & No pets. Couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.578.2664**

**MARKHAM & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry. Also 1 bedroom available on main floor. No smoking & No pets.
தொடர்புகளுக்கு: **647.766.7306**

**PORT UNION & KINGSTON**
2 bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking & kitchen. Couple / small family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.278.3124**

**MARKHAM & ELSON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to access the bus, schools & all facilities. Avail. immediately.
**647.530.2816 / 905.472.5654**

**MORNINGSIDE & SHEPPARD**
1 bedroom bsmt for rent. Sep. entrance, Sep.laundry & parking. Couple or students preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.473.3052**

**MIDDLEFIELD & 14TH AVE.**
2 Bedrooms brand new bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Close to school & all other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.740.9967**

**TAPSCOTT & CROWTRAIL**
1 Bedroom bsmt for rent. Laundry & parking. Family / couple / group of students preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.261.3482**

34ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

## BASEMENT FOR RENT

**WHITES ROAD & BAYLY**
2 Bedrooms bsmt for rent. 1 Washroom, Sep. entrance & 2 parking. Rent $1900 + Utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.728.7036**

**MORNINGSIDE & ROUGH RIVER**
2 bedroom bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.509.5750**

**MIDLAND & FINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, kitchen & parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.774.6599**

**HWY 401 & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Female /couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.705.8157**

**MORNINGSIDE & NIGHTSTAR**
1 Bedroom bsmt for rent. Sep.entrance. Close to Eraa Supermarket. Single/ couple preferred. Avail. immediately.
**647.656.1131/416.291.4340**

**CASTLEMORE & 9TH LINE**
2 Bedrooms bsmt for rent. Hall, kitchen, Sep. entrance & laundry. Ladies & students preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.833.4012**

**MARKHAM & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & no parking. Male preferred. Close to all facilities. Avail immediately.
தொடர்புகளுக்கு: **416.388.2401**

**SALEM & KINGSTON**
1 + Den bsmt for rent. Full washroom, hall, kitchen. Close to all facilities. Family /students preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.671.4017**

மேலும் பக்கங்கள் 13,14,15,16

## BASEMENT FOR RENT

**TAUNTON & HARWOOD AVE. (AJEX)** 2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to bus, school & supermarket. Avail immediately.
தொடர்புகளுக்கு: **647.964.1772**

**MCCOWAN & STEELES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. February 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.762.2297**

**SANDALWOOD & DIXIE (Brampton– hwy 410)**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to all facilities. No pets & no smoking.
தொடர்புகளுக்கு: **647.622.3794**

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom for rent in a bsmt. Couple / ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.763.9120**

**14TH AVE. & 9TH LANE**
3 bedrooms Brand new bsmt for rent. 2 washroom, Sep.entrance, 2 parking & laundry. Close to school. Avail. immediately.
**416.258.8253/416.824.9667**

**BERRY & MOLTON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.836.5482**

## BASEMENT FOR RENT

**MARKHAM & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. No smoke & no pets. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**647.631.5745**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## ROOM FOR RENT

**MARKHAM & PAINTED POST**
1 Bedroom for rent in a 3 bedrooms bsmt. Male preferred. Close to Centennial college. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.726.6961**

**MCCOWAN & SHEPPARD**
1 Room for rent in a luxury condo (ground floor). Sep.washroom. Female preferred. Avail. immediately.
**647.760.3376 / 647.835.3376**

**PORT UNION & LAWSON**
Rooms for rent. Sep.washroom & shared kitchen. Close to TTC, Centennial college, Scar. campus & HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.502.0312**

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom with attached washroom for rent in a 1st floor. Shared kitchen. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.201.1222**

**PHARMACY & ELLESMERE**
Room for rent in main floor. Close to mall & shops. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.839.3710**

**MORNINGSIDE & OLD FINCH**
Room for rent in main floor & basement. Parking & furniture available. Close to access the bus. including internet. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.399.4273**

**MCCOWAN & DENISON**
1 Room for rent in a 5 bedrooms house. பெண்கள் விரும்பத்தக்கது. 1 Parking. Close to all amenities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.678.2599**

**MCCOWAN & HIGHGLEN**
1 Bedroom for rent in a 2 bedrooms bsmt. Sep. entrance, parking & laundry. Ladies prefered. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.291.9050**

**MARKHAM & DENISON**
**TAPSCOTT & FINCH**
1 Bedroom for rent. Rent $700. No alcohol, no smoke & no pets. Avail. immediately.
**647.507.2148 / 647.864.1051**

**MARKHAM & STEELES**
1 Bedroom for rent in a house. Sep. washroom. Ladies / students preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.339.2560**

# ROOM FOR RENT

**NEILSON & FINCH**
Rooms for rent. Couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.427.4090**

**BRIMLEY & EGLINTON**
1 bedroom for rent in a bsmt. Sep. entrance. Working / students preferred. Avail. February 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.404.7225**

**MARKHAM & ELLESMERE**
1 Bedroom for rent on main floor. Close to Centennial College. Ladies preferred. Avail. February 01, 2024.
Please text: **416.890.7510**

**MIDDLEFIELD & FINCH**
1 bedroom for rent. Sep. entrance. Close to TTC. Working/student Male preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.707.6095**

**MARKHAM & ELLESMERE**
Room for rent in the two bedroom basement. Avail. immediately. Wifi available.
தொடர்புகளுக்கு: **647.996.6977**

**MCCOWAN / MCNICOLL**
**1 Room for rent in a house. Only Seniors / ladies.** Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647 823 3667**

## BASEMENT FOR RENT

**9th LINE & 14th AVENUE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking & laundry. Close all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.406.7273**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom furnished bsmt for rent. Utility + internet included. Sep. entrance. Available immediately.
தொடர்புகளுக்கு: **416.704.3975**

## BASEMENT FOR RENT

**PORTUNION & SHEPHERD**
1 Bedroom bsmt for rent. Full washroom, no kitchen, no parking, sep entrance & wifi. Close to bus stop & shopping mall. Avai. immediately.
தொடர்புகளுக்கு: **647.808.1240**

# HOUSE FOR RENT

**AJAX**
4 Bedrooms house for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **289.923.3062**

**KENNEDY & HWY 401**
2 Bedrooms condo. for rent. 2 washroom & 1 Parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.836.0010**

**WESTNEY & HWY 401 (AJAX)**
4 Bedrooms house for rent. 4 washrooms & 4 parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.201.1222**

**MARKHAM & DENISON**
4 Bedroom house for rent. 2.5 washrooms & parking. Close to School, shopping & all other facilities. Avail. immediately.
**Pl. Call Haran: 416.880.4829**

**10TH LINE & MAIN ST (stouffville)**
3 Bedrooms full house for rent. 2 full washroom and also 2 bedroom bsmt for rent. sep. entrance, 1 washroom. Avail March 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.836.0010**

**WHITBY & TAUNTON**
4 Bedrooms house for rent. Close to bus stop & Walmart. Avail. February 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.890.2746**
**(Call after 4pm)**

## BASEMENT FOR RENT

**WHITES ROAD & TAUNTON**
புத்தம் புதிய 1 Bedroom walkout Bsmt (9-foot ceiling) உடனடியாக வாடகைக்கு உண்டு. Sep. entrance, sep. laundry, kitchen, 1 washroom & 1 parking.
தொடர்புகளுக்கு: **416.668.8187**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
Newly renovated 2 bedrooms, 2 full wash rooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to TTC, Public, catholic elementary school & grocery store. Avail. immediately.
**647.564.6800 / 416.371.7866**

மேலும் பக்கங்கள் 12,14,15,16

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT FOR RENT

**KINGSTON & WHITES ROAD**
Newly renovated 2 bedrooms bsmt for rent. Sep. entrance, 1 bathroom & kitchen. Close to HWY401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.533.0492**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Rent $1,500 including all bills. 1 or 2 people. preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.317.2457**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Close to all facilities. No pets. Avail. immediately.
**647.856.5949/ 647.616.4274**

## BASEMENT FOR RENT

**BAYVIEW & MULOCK (NEW MARKET)**
1 bedroom Bsmt for rent in near South Lake hospital. Sep. entrance & parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **289.231.6620**

## BASEMENT FOR RENT

**TAUNTON & BROCK ROAD**
2 Bedrooms bsmt for rent. Students or small family preferred. Available immediately.
தொடர்புகளுக்கு: **416 819 7923**
**(If not answered please leave message)**

## BASEMENT FOR RENT

**ELLESMERE & SLAN AVE.**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. No smoking & no pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.998.0181**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & FINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, washroom, Hall, kitchen & sep. washer and dryer. Close to appliances, bus stop & school. Avail. immediately.
**647.637.2625 / 416.799.0811**

## ROOM FOR RENT

**MARKHAM & DENISON**
1 Bedroom for rent in a new bsmt. Sep. entrance. Utilities & internet included. Close to all facilities. Students preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**647.917.1804**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & STAINES**
1 Bedroom for rent in a 3 bedrooms town house. Female students preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.677.5488**

## ROOM FOR RENT

**STEELES & 9TH LINE**
1 Bedroom for rent in a house. Attached washroom & parking. No pets & no Smoking. Female preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.931.3444**

## BASEMENT/ ROOM FOR RENT

**MARKHAM & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking & laundry. Also 2 rooms availble in mail floor. Close to all facilities. Avail immediately.
**647.858.2290 /647.534.9897**

## ROOM FOR RENT

**14 AVE. & 9TH LINE**
Rooms for rent in a main floor & brand new basement. Parking. Couple / female / male preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**416.300.1796**

## ROOM FOR RENT

**MARKHAM & EGLINTON**
1Big bedroom for rent in a condo. Free wifi & TV available. Close to all facilities. Avail. immediately.
**647.616.9393/647.656.4909**

## ROOM FOR RENT

**NEILSON & SHEPPARD**
Room for rent with attached washroom in a bsmt. Kitchen & living room & Sep. washer & dryer. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.501.2720**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR**
**Full House, Condo, Basement & Business Units**
**647-861-8240**

## HOUSE FOR RENT

**HWY 7 & 9TH LINE**
4 bedrooms 2 story house for rent. 2 washrooms & 4 parkings. Close to all facilities. Avail. March 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.560.4152**

## LAND FOR SALE IN COLOMBO

**21 Perches of Land.**
**Walking distance to Jayawardanapura Hospital.**
**Close to Maharagama city & all amenities.**
தொடர்புகளுக்கு: **647.894.2147**

## HOME TUTOR WANTED

Female home tutor wanted for 2 students in Grades 8 & 10 to teach Math, English & Science. Location near University of Toronto Scarborough Campus.
**647.551.1758/ 647.446.8590**

## ROOM FOR RENT

**KENNEDY & CASTLEMORE**
மார்க்கம் பேஸ்மெண்ட் அறை வாடகைக்கு உண்டு. Rent $800. Furnished kitchen, washroom, shared laundry with one Parking.
மகளிர் மட்டும்.
தொடர்புகளுக்கு: **416.994.9411**

## HOUSE FOR RENT

**HWY 407 & DONALD COUSENS**
2 bedrooms coach house for rent. Close to HWY 407, GO Station & other facilities. Avail. March 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.862.7056**

## மணமகன் தேவை

கனடாவில் வாழும் Roman catholic 39 வயதான **(Graduated in Medical office Administration)** பெண்ணுக்கு மணமாகாத 39 - 42 வயதுள்ள Roman catholic மணமகனைத் தேடுகிறோம்.
**416.551.9737/ 647.937.1243**

## JOB VACANCY

**HOME CARE WORKER**
Full-time live-in caregiver for a senior in Markham needed. For more details call.
**647.986.6659**

## ROOM FOR RENT

**MIDLAND & EGLINTON**
1 bedroom in a 2 bedrooms condo. for rent. ONLY working or studying female. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.880.2932**

## HOUSE FOR RENT

**MCLEVIN & MALVERN ST.**
3 bedrooms house for rent. 2 parking. Close to bus stop, shopping centre & Leon. Avail. immediately.
**647.898.6790 / 647.741.0469**

## HOUSE / BASEMENT FOR RENT

**HWY 401 & PORT UNION**
3 bedrooms Bungalow house for rent. 1 washroom, 2 Parking & laundry. Close to all facilties.
1 bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking & laundry.
Avail. immediately. வீடு, Bsmtஇனை தனித்தனியாகவோ அல்லது ஒன்றாகவோ பெற்றுக் கொள்ள முடியும்.
தொடர்புகளுக்கு: **647.408.7125– Please Text**

## ROOM FOR RENT

**BRIMLEY & EGLINTON**
1 Bedroom for rent in a bsmt with attached washroom. Sep. entrance, utilities included. Convenient location for groceries, TTC & etc. Non smokers & working people only.
**Please call / Text 416.268.5014**

## HOUSE FOR RENT

**WHITES ROAD & TAUNTON**
4 Bedrooms brand new house for rent. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.648.6561**

## BASEMENT FOR RENT

**BROCK & KINGSTON**
Brand new 1 bedroom legal bsmt for rent. 1 full washroom, Sep. entrance. Walking distance Pickering Town centre. Close to HWY 401 & all shopping facilities. No pet & no smoking. Avail immediately.
**416.731.8542 / 416.301.4783**

## ROOM FOR RENT

**WHITES ROAD & TAUNTON (PICKERING)**
2 Bedrooms for rent in a 4 bedrooms house. 1 parking. Available immediately.
தொடர்புகளுக்கு: **416.895.4283**

## HOUSE FOR RENT

**MARKHAM & STEELES**
4 bedroom house for rent. Close to all facilities. Utilities 65%. Avail. April 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.660.4874**

## HOUSE FOR RENT

**HWY 401 /PORT UNION (Centennial Rd.)**
Bright clean 3 bedrooms & full washroom Bungalow house main floor for rent. Parking, laundry & Internet. Close to bus stop, HWY 401, UFT, Centennial College, Rouge Hill Go & all facilities. Avail. March 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.315.1933**

## HOUSE/ROOM FOR RENT

**SCARBOROUGH**
1 Room with attached washroom.
Prefer -2 Girls /Office space/a Senior.
**MCCOWAN & EGLINTON**
2 Bedrooms + 1 washroom apt. Avail. February 01, 2024.
**647.375.8579/ 647.202.4586**

## HOUSE/BASEMENT FOR RENT

**TAPSCOTT & CROWTRAIL**
1 Bedroom basement for rent.
STAINES & MORNINGSIDE
2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.
**Contact: 647.686.8590**

## HOUSE & BASEMENT FOR RENT

1. **Markham & Steeles –** 2 bedroom Bsmt for rent.
2. **Ajax –** 3 bedroom full house with 2 parking for rent.
3. **Scarborough –** 3 bedroom house with1b.r. Bsmt Apt. for rent.
4. **Scarborough –** Basement for rent.

தொடர்புகளுக்கு: **647. 282.5782**

## HOUSE FOR RENT

**MARKHAM & ELLESMERE**
**3 bedrooms & 1 full washroom bungalow house main floor for rent. Bus 5 minutes walking distance, school, bank, mall, HWY 401 & other facilities. Avail. February 01, 2024.**
தொடர்புகளுக்கு: **647.996.6977**

## HOUSE FOR RENT

**BROCK ST. & VICTORIA ST.**
3 Bedrooms Town house for rent. 3 Washroom, 2 parking. Close to HWY 401 & whitby go station in 5 min. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.862.7111**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & SEWLLES**
**Multiple bedrooms available with bathroom & kitchen.**
தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும்.
**Close to TTC (2 Buses). Contact owner about renting price.**
தொடர்புகளுக்கு: **416.908.9494**

## HOUSE, CONDO. & BASEMENT FOR RENT


**MARKHAM & DENISON** – 2 bedroom & 2 bathroom condo. for rent.
**MCCOWAN & SHEPPARD (Scarborough)** – 3 bedroom & 3 bathroom house for rent.
**NEILSON & FINCH** – 1 bedroom & 1 bathroom basement for rent.
**WHITBY** – 2 bedroom & 2 washroom basement for rent.
**Please call or text – 647.269.0193**

## JOB VACANCY

**CHILD CAREGIVER – LOCATION – AJAX**
Must have a genuine love for children & experience. Responsibilities include playtime, meal preparing, light cleaning, washing cloths & ensuring a safe environment. If you're interested, we would like to hear from you. Live-in or Live out.
**Contact: 647.532.9378**

## BENTON AUTO DETAILING

**BENTON CAR WASH**
**Winter package starting from $49 & 2nd time service 10% off.**
தொடர்புகளுக்கு: **416 768 1001**
**1080 TAPSCOTT ROAD**






## பேட் சில்வர் காடின் முதியோர் இல்லம்

**24 மணி நேர முதியோர் பராமரிப்பு சேவை**



பயிற்றப்பட்ட பராமரிப்பாளர்களால் 24 மணி நேரமும் ஆதரவாகவும் சௌகரியமாகவும், மகிழ்ச்சியாகவும் கழித்திட நாடவேண்டிய ஒரே இடம்
**416.613.1840 / 647.272.6993**
birdsilvergardens@gmail.com
MAIN INTERSECTION:-( Port Union & Island Road) )

## HOME RENOVATION

**உங்கள் வீட்டில் சகலவிதமான...**

* வீட்டு சீர்திருத்தம்
* Plumbing & Electrical (Spot Light)
* Tiles & Hardwood Laminate வேலைகள்
* Kitchen Cabinet Installation வேலைகள்
* Painting வேலைகள்







இத்தனையும் உங்கள் மனத்திருப்திக்கேற்றவாறு நியாயமான விலையில் செய்து கொடுக்கப்படும்.

"We beat any Competitors"

வரன் - 647.965.8147
நேசன் - 647.293.7686


## நானிலம்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

விட்டேனே என்று நினைத்து வருந்தவில்லை. நான் வருந்துவதெல்லாம் தலைவர் பொருட்டே தான் என்றாள் தலைவி.

அவர் போன வழி மிகவும் துன்பம் தரக்கூடிய வழியென்று கூறக்கேட்டேன்.

நட்பின் பெருமை பற்றிக் குறுந்தொகையில் வரும் பாடல் சிலவற்றையும் கடந்த இதழ்களில் உரையாடினோம்.

தலைவன், தலைவி ஆகியோரின் காதல் வாழ்க்கையில் தோழியின் பங்கு எவ்வளவு உயர்ந்ததாக உள்ளது என்பதை குறுந்தொகையில் உள்ள சில பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. நட்பின் பெருமை இவற்றால் நன்கு புலப்படுகிறது. சங்க இலக்கியங்கள் மூலமாகவும் நட்பு பற்றிய கருத்துக்களை இத்தொடர் கட்டுரையில் தொடர்ந்து ஆராய்வோம்.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம்.

(தொடரும்)

ஒரு தாய் தன் மகனை ஆளாக்க 20 வருடம் ஆகிறது.., அந்த ஆணை 20 நிமிடங்களில் முட்டாள் ஆக்குகிறது காதல்..

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 12,13,14,15

wpm Property Management
Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**

***Brampton*** – **Dixie Rd/Countryside Rd - Bsmt**
(1Brm + 1Bath) **[$1,650/m]**
***Brampton*** – **Mcvean/Castlemore - Bsmt**
(1+1Brm + 1Bath) **[$1,750/m]**
***Toronto*** – **Windmere/The Queensway - Townhouse**
(3Brm + 3Bath) **[$4,300/m]**
***Toronto*** – **Prot Union/Lawrence – Townhouse**
(3+1Brm + 2Bath) **[$13,000/m]**
***Markham*** – **HWY 7/Birchmont – Condo**
(2Brm + 2Bath) **[$3,200/m]**
***Markham*** – **McCowan/Denison – Bsmt**
(2Brm + 1Bath) **[$2,200/m]**

**Available for Rent**

***Pickering*** – **Whitevale Rd/Mulberry Lane - Detached**
(4Brm + 4Bath) **[$3,400/m]**
***Pickering*** – **Simcoe /Conlin - Detached**
(4+2Brm + 4Bath) **[$3,450/m]**
***Ajax*** – **Audely Rd S/Bayly St E - Detached**
(4Brm + 4Bath) **[$4,200/m]**
***Oshawa*** – **Simcoe St N/Adelaide Ave E – Bungalow**
(3Brm + 2Bath) **[$2,600/m]**
***Porthope*** – **Walton St/Ontario St– Apartment**
(2Brm + 1Bath) **[$1,999/m]**
***Quinte West*** – **HWY 2/ 2nd Dug Hill Rd – Detached**
(3+2Brm + 3Bath) **[$3,200/m]**

* வீட்டின் விலைகள் தற்போது இறங்கியுள்ளன. ஆனாலும் வாடகை கூடிக் கொண்டே போகிறது.

* நீங்கள் ஒரு வீட்டைத் தற்போது வாங்கி வாடகைக்கு விடுவதன் மூலம் நன்மையடையும் சந்தர்ப்பம் இருக்கிறது.

* வாடகைக்கு கொடுத்த பின் வாடகையை பெறுவதில் சிரமமிருந்தால் அதை ஈடுகட்ட எமது நிறுவனம் (Watson Property Management) **Rental Guarantee** வாடகைக்கான உத்தரவாதத்தைத் தருகின்றது. விபரங்களை அறிய தொடர்பு கொள்ளலாம்.

**Real Estate & Property Management துறையில் 32 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.**

**கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999**

**We are managing Condos, Houses, Apartments in the area of Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.**

# கனடாவில் தமிழ் மரபுத் திங்கள் நிகழ்வுகள்




கனடாவில் தமிழ் மரபுத்திங்கள் நிகழ்வுகளும், தைப்பொங்கல் நிகழ்வுகளும் ஆரம்பமாகி, வெகு விமர்சையாகக் கொண்டாடப்படுவதைப் பார்க்க முடிந்தது. பொதுவாக ஜனவரி மாதம் இங்கே பனி கொட்டிக் கொண்டிருந்தாலும், தமிழரின் பாரம்பரிய கொண்டாட்டம் என்பதால் பின்வாங்காது பலரும் கலந்து நிகழ்வைச் சிறப்பித்த வண்ணம் இருப்பதை அவதானிக்க முடிந்தது.



நீதன் சண் அவர்களால் முன்மொழியப் பட்ட இத்தமிழ் பாரம்பரிய மாதம், 2010ஆம் ஆண்டு கனடாவில் தொடங்கப் பட்டது, இதைத் தொடர்ந்து 2016ஆம் ஆண்டு கரி ஆனந்தசங்கரியால் கொண்ட வரப்பட்ட பிரேரணை கனடிய நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இம்முறை தமிழ் மரபுத்திங்கள் நிகழ்வுகளைத் தமிழரின் அதிக நிறுவனங்கள் கொண் டாடியிருந்தன. இதுவரை தைப்பொங்கல் விழாவாகக் கொண்டாடியோர் சிலர் இதை இப்போது மரபுத்திங்கள் விழாவாக மாற்றி இருந்தனர். சில நிறுவனங்களுக்கு இப்படியான கொண்டாட்டங்களுக்கு அரச நிதி கிடைப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம். சில இடங்களில் தங்களுடைய செல்வாக்கைக் காட்டத் தனித்தனியாக விழா எடுத்துத் தங்களுக்குத் தேவையானவர்களை மேடையில் ஏற்றி, இணையத்தளங்களில் படங்களைப் போட்டு அதன்மூலம் தங்களைப் பிரபலமாக்கச் சிலர் முயற்சித்திருப்பதும் வெளிப்படையாகத்



தெரிந்தது. இவர்களுக்கு மத்தியில் அகப்பட்டு மூச்சுத் திணறியோர் பெரும்பாலும் பல்லினம் சார்ந்த அரசியல் பிரமுகர்களாகத்தான் இருந்தனர்.

இனிவரும் காலத்தில் தைப்பொங்கல் என்ற தமிழரின் பாரம்பரிய நிகழ்வு கனடிய மண்ணில் மெல்ல மெல்ல மறைந்து போய்விடுமோ என்று சில நிகழ்வுகளைப் பார்த்தபோது தோன்றியது. ஒரு சிலர் மட்டும் பொங்கலையும், மரபுத்திங்களையும் ஒன்றாகச் சேர்த்து கொண்டாடினர். ஏனையோர் பெரியபதாகைகள் செய்து மரபுத்திங்களை மட்டும் கொண்டாடினர். ஒரு காலத்தில் தமிழரின் மகிழ்ச்சியான கொண்டாட்டங்கள் தூயதமிழில் தேவாரம் ஓதப்பட்டே ஆரம்பமாகின. இடையிலே பல காரணங்கள் சொல்லப்பட்டு தேவாரம் ஓதும்முறை இப்போது அனேகமாகத் தவிர்க்கப்பட்டு விட்டது.

நிகழ்வு ஒன்றில் சந்தித்த இலக்கிய நண்பர் ஒருவர் 'சர்வதேசம் திரும்பிப் பார்க்கக்கூடியதாக இவர்கள் ஏன் பெரிய



அளவில் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து மரபுத்திங்களை ஒரு விழாவாகக் கொண்டாடக்கூடாது' என்று தனது ஆதங்கத்தை முன்வைத்தார். அவர் கேட்டதில் நியாயம் இருந்தது. ஆனால் இதற்குப் பின்னால் ஒற்றுமை, நிதிப் பங்களிப்பு, கலைஞர்களின் பங்களிப்பு, அரங்கம், சுயலாபம் தேடும் அரசியல் என்று பல விடயங்கள் இருக்கின்றன. 2009ஆம் ஆண்டுக்குப்பின் இப்படியான தமிழ் மொழி சார்ந்த விடயங்களைப் பெரிய அளவில் முன்னெடுக்க இங்கே யாரும் முன்வரவில்லை என்பதுதான் உண்மை.

ஒன்ராறியோவின் பல பகுதிகளிலும் இருந்து வந்து 'வோன்' பகுதியில் புதிதாகக் குடிபுகுந்த தமிழர் முதன் முதலாக 'வோன் தமிழ் பண்பாட்டு அமைப்பு' என்ற பெயரில் அன்பழகன் குமாரசாமியின் தலைமையில் தமிழ் மரபுத் திங்களைக் கொண்டாடியிருந்தனர். பல அமைப்புகளில் செயற்படுவதாலும், வோன் குடிமகன் என்பதாலும் எனக்கும் அழைப்பு வந்தது. எல்லோருக்கும் சர்க்கரைப் பொங்கல் கொடுத்தனர். வோன் மேயர் ஸ் ரீவன் டெல்டுகா, ஹரி ஆனந்தசங்கரி, நீதன் சண், விஜய் தணிகாசலம், பார்த்தி கந்தவேள், அனு சிறீஸ்கந்தராஜா போன்றவர்களுடன் நட்புரீதியாக உரை யாட முடிந்தது. அரசியல் சார்ந்தவர்கள் தான் மேடையில் அதிகம் நின்றனர். கலை நிகழ்ச்சிகள் தரமானவையாக இருந்தன, இளைய தலைமுறையினர் அதிக அளவில் வந்து கலந்து கொண்டு சிறப்பித்தது பாராட்டுக்குரியதாக இருந்தது. இதுபோன்ற சில நிகழ்வுகளில் இளைய தலைமுறையினர் எங்கள் ஆதங்கத்தைப் புரிந்துகொண்டு செயற் பட்டதால் இங்கே 'தமிழ் வாழும்' என்ற நம்பிக்கை துளிர்த்தது.

# பேராசிரியர் முனைவர் கரு. முத்தையா அவர்களுடனான நேர்காணல்

## நேர் கண்டவர்: குரு அரவிந்தன்

தமிழ்நாட்டில் தேவகோட்டை சேவுகன் அண்ணாமலைக் கல்லூரியில் பணி ஓய்வுபெற்ற முனைவர் கரு. முத்தையா அவர்கள் பவளவிழா கண்ட பேராசிரியர். பல அரிய நூல்களுக்குச் சொந்தக்காரர் மட்டுமல்ல, நகரத்தார் கலைக்களஞ்சியத் தைத் தொகுத்து தமிழ்ப்பண்பாட்டை உலகறியச் செய்தவர். கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் சார்பாக ரொறொன்ரோவில் அவரைச் சந்தித்த போது அவருடன் உரையாட எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. இனிமையாக, எளிமையாகப் பழகும் இவர் 2010ஆம் ஆண்டும் ஒருமுறை ரொறொன்ரோ வந்திருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார்.

**கேள்வி 1:** வணக்கம். பேராசிரியர் கரு. முத்தையா அவர்களே 1965ஆம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டதால் சிறைக்குச் சென்றீர் கள். அந்த அளவுக்குத் தமிழ் உணர்வை உங்களுக்கு ஊட்டியவர்கள் யார்?

**பதில்:** நான் காரைக்குடியில் மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது எனக்குத் தமிழ் கற்பித்த ஆசிரியர்கள் 1. கவிஞர் முடியரசன் (9ஆம் வகுப்பில்) 2. முனைவர் தமிழண்ணல் (11ஆம் வகுப்பில்). இவ்விருவரும் எனது தமிழ் அறிவிற்கு அடித்தளம் அமைத்ததோடு, தமிழ் ஆர்வம், தமிழ் உணர்வு ஆகியவற்றை என் நெஞ்சில் கனலாக விதைத்தவர்கள்.

அந்தக் கனலை விசிறிப் பெரு நெருப்பாக்கியவை பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகிய இருவரின் பேச்சும், எழுத்தும்.

**கேள்வி 2:** 1950களில் சாண்டில்யனின் வாசகனாக (ரசிகனாக) இருந்த நீங்கள் 1980இல் ஜெயகாந்தன் நாவல்களை ஆய்வுப் பொருளாக எடுத்த பின்னணி என்ன?

**பதில்:** ஐம்பதுகளில் உயர்நிலைப் பள்ளி யில் படித்துக் கொண்டிருந்த காலம். ஆர்வத் தூண்டல்களோடு (suspense), கதைத் தலைவனின் வீர சாகசங்கள், கதைத் தலைவியின் அழகும், காதலும் பற்றிய வருணனைக் கவர்ச்சி இவை என்னை ஈர்த்தன.

எண்பதுகளில் எனது இலக்கிய அறிவு வளர்ந்த நிலையில் சாண்டில்யன் போன்றோர் எழுத்து பொழுது போக்கிற்கு மட்டுமே உரியது. அதில் ஆய்வுக்குரிய சிந்தனைத் துளிகள் இல்லை என்ற விழிப்புநிலை ஏற்பட்டது.

அதுதான் சமகால இலக்கியத்தில் ஆழமான சிந்தனைகளை வெளிப்படுத்தி ஆய்வுக்குரிய களங்களை உள்ளடக்கி வெளிவந்த ஜெயகாந்தன் நாவல்களை ஆய்வு செய்ய முனைந்ததன் பின்னணி.



பேராசிரியர் கரு. முத்தையா அவர்கள் 'விளம்பரம் 2010' சந்திப்பில் ஆற்றிய உரையை www.vlambaram.com ஜனவரி 15, 2010இல் பக்கம் 19இல் வாசிக்கலாம்.

**கேள்வி 3:** உங்களைக் கவர்ந்த ஜெயகாந்தனின் பாத்திரப் படைப்பைப் பற்றிச் சொல்ல முடியுமா?

**பதில்:** ஜெயகாந்தன் நாவல்களில் "பாத்திரப் படைப்பு" எனும் எனது ஆய்வேட்டைத் திருத்திக் கருத்துரை வழங்கிய தேர்வாளர்கள் மூவரில் ஒருவர் பொதுவுடைமைச் சிந்தனைகளை முன் வைத்து எழுதிய கலாநிதி க. கைலாசபதி. அவர் என் ஆய்வைப் பற்றி எழுதியிருந்த கருத்துரை "This is a microstudy of Jeyakanthan's works" என்பது.

அவ்வாறு பாராட்டப் பெற்ற ஆய்வில் என்னைக் கவர்ந்த பாத்திரங்களாக நான் குறிப்பிட்டிருப்பவை:

1. "ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்" நாவலின் ஹென்றி.

2. "ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்" நாவலின் கல்யாணி.

பெரும்பாலும் நடப்பியல் பாத்திரங்களைப் (realistic characters) படைத்த ஜெயகாந்தன் படைத்த குறிக்கோள் பாத்திரங்கள் (idealistic characters) அவை இரண்டும்.


**கேள்வி 4:** "நகரத்தார் கலைக் களஞ்சியத்தை" உருவாக்கப் பெரும் பணியாற்றி இருக்கிறீர்கள். இந்தக் கடின உழைப்பிற்கு எவ்வளவு காலம் செலவிட்டீர்கள்?

பதில்: "நான்காண்டு உழைப்பு - முந் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களிலிருந்து திரட்டிய செய்திகள், அறுநூற்றுக்கும் மேற்பட்டோரைப் பேட்டி கண்டு பெற்ற குறிப்புக்கள் ஆகியவற்றால் உருவானது இக்களஞ்சியம்" என அந்நூலின் முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறேன்.

**கேள்வி 5:** சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி ஆகிய காப்பியங்களுக்கு உரை எழுதியிருக்கிறீர்கள். அவை தேவையானவர்களைச் சென்றடைந்தனவா?

**பதில்:** அந்த உரைகளை எழுதுமாறு என்னைத் தூண்டியவரும், அவற்றைக் கலாச்சேத்திர நிறுவனம் வாயிலாக வெளியிட்டவரும் கோவிலூர் திருமடத்தின் பதின்மூன்றாவது மடாதிபதி சீர்வளர் சீர் மெய்யப்ப ஞான தேசிகராவார்.

அவர் தாம் வெளியிடும் நூல்களை விற்பனை செய்வது தொடர்பாகச் சில கொள்கைகளை உடையவர். அவற்றின்படி அவர் விற்பனை நிலையங்களுக்கு நூல் களைக் கொடுப்பதில்லை. இச்சூழலில் உரை நூல்கள் பெருவாரியான மக்களைச் சென்றடைய வாய்ப்புகள் குறைவு.




எனினும் தினமணி, தினத்தந்தி, குமுதம், துக்ளக், "இந்து" நாளிதழ், தினமலர் ஆகிய இதழ்களில் உரை நூல்கள் பற்றிய திறனாய்வுகள் வெளிவந்த சூழலில் பலர் என்னையோ, கோவிலூர் மடத்தையோ தொடர்பு கொண்டு உரை நூல்களை விலை கொடுத்துப் பெற்றனர். ஆயினும் சிலப்பதிகார உரை நூல்கள் விற்பனையான அளவு ஏனைய இரு காப்பியங்களின் உரை நூல்கள் விற்பனை ஆகவில்லை என்பதே உண்மை.

**கேள்வி 6:** உங்களது இலக்கியப் பணி, இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபாடு, ஆசிரியர் இயக்க ஈடுபாடு இவற்றின் காரணமாக உங்கள் குடும்பத்திற்கு ஆற்ற வேண்டிய பங்களிப்பைச் சரிவரச் செய்ய முடியாமல் போனதாக எப்போதாவது உணர்ந்திருக்கிறீர்களா?

**பதில்:** இக்கேள்விக்குரிய சுருக்கமான பதில் "இல்லை" என்பதே. அதுபற்றிய முழு விவரம் உங்களது இறுதிக் கேள்விக்கு நான் அளித்திருக்கும் பதிலில் அடங்கியுள்ளது.

ஆயின் என் மனத்தில் ஒரு நெருடல் உண்டு. 1979 பிப்ரவரியில் ஆசிரியர் இயக்கம் 'MUTA' மறியல் போராட்டம் நடத்தியது. MUTA இயக்கத்தில் நான் கிளைப் பொறுப்பிலிருந்து, மைய அமைப்பின் பொறுப்புகள் வரை மிக இன்றியமையாத பங்குபெற்றிருந்தேன். எனவே மறியலில் பங்கேற்றுச் சிறை செல்லத் தயாராய் இருந்தேன்.

ஆனால் அப்போது என் மனைவி நிறை மாதக் கருவுற்ற நிலையில் பிள்ளைப் பேற்றை எதிர்பார்த்திருந்த நேரம். என்றாலும் கொள்கைப் பிடிப்பின் வேகத்தில் நான் மறியலில் பங்கேற்றுச் சிறை சென்றேன்.

நான் சிறையில் இருக்கும்போது என் மனைவி மகனைப் (இங்கே இப்போது கனடாவில் வாழும் கண்ணன்) பெற்றெடுத் தாள். மனைவியின் பேறு காலத்தில் உடனிருக்க இயலாத சூழல் எனது இயக்க ஈடுபாட்டினால் நேரந்திருந்ததை எண்ணும் போதெல்லாம், குடும்பக் கடமையில் நான் வழுவி விட்டேனோ என்ற நெருடல் இன்றளவும் உள்ளது.




**கேள்வி 7:** தமிழ் இலக்கியத் துறையில் உங்கள் முன்னேற்றத்திற்குக் கடந்த காலங்களில் உங்கள் மனைவி மீனாட்சி ஆச்சியின் பங்களிப்பு எப்படி இருந்தது?

**பதில்:** வாழ்க்கையில் நான் பெற்ற அனைத்து முன்னேற்றங்களுக்கும் அடி நாதமாகவும், முதுகெலும்பாகவும் அமைந்தது என் துணைவியாரின் பங்களிப்பேயாகும்.

சொற்பொழிவுக்குச் செல்வது, நூல்கள் எழுதத் தகவல் திரட்டச் செல்வது, எழுதிய நூல்களை அச்சிடுதல் தொடர்பாகச் செல்வது என நான் வெளி உலகிலேயே சுற்றித் திரிந்து இலக்கியப் பணி செய்த போது, என் குடும்பப் பொறுப்பை முழுமையாகச் சுமந்ததும், அவை தொடர்பாக எனக்கு எந்தத் தொல்லையும் நேரிடாமல் பார்த்துக் கொண்டதும் என் துணைவியார் எனக்குச் செய்த பேருதவி ஆகும்.

மேலும் எனது இலக்கியப் பணிகள் தொடர்பாகப் பல நேரங்களில் என் வீட்டிற்கு (என் உதவிக்காக) வரும் இலக்கிய ஆளுமைகளை இன்முகத் தோடு வரவேற்று, விருந்தளித்து, எனது

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)


MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
• Advanced function
• Calculus & vectors
• Data management
All Classes available in Scarborough & Stouffville

Mr. S.F. Xavier (Teacher)
Contact: 647.340.9490 / 416.732.2228

# இறுகப்பற்று - திரைவிமர்சனம்


ஆரணி ஞானநாயகன்

2023 ஒக்ரோபரில் வெளியான இப்படத்தில் கதாநாயகி சிரத்தா ஸ்ரீநாத் திருமண மானவர்களுக்கு ஆலோசனை வழங்கும் மித்ராவாக நடித்துள்ளார்.

மித்ரா தனது கணவன் மனோவுடன் (விக்ரம் பிரபு) சந்தோசமாக வாழ்ந்து வருகிறார். அதற்கு மாறாக, தமது வாழ்க்கையில் கஷ்டங்களை அனுபவித்து தமக்கிடையில் சண்டைபோடும் ஜோடி களுக்கு ஆலோசனை வழங்கி வருகிறார். இவ்வாறு மித்ரா சந்திக்கும் இருவிதமான கணவன்-மனைவியர்களைப் பற்றியது இப்படக்கதை.

ஒரு ஜோடியில் அர்ஜுன் என்பவர் தனது மனைவி திவ்யா தன்னுடன் சரியாகப் பழகி பேசுவதில்லை என்று மித்ராவிடம் உதவி கேட்கிறார். மற்ற ஜோடியில் பவித்திரா என்பவர் தனது கணவர் ரங்கேஷ் தனது நிறையைக் குறைக்க தன்னை வற்புறுத்துவதாகவும், இதைச் செய்ய முடியாததால் தன்னை விவா காரத்து செய்ய விரும்புகிறார் என்றும்



மித்ராவிடம் கூறி ஆலோசனை கேட்கிறார். இளம் ஜோடியான அர்ஜுன்-திவ்யா மற்றும் அண்மையில் பிள்ளையைப் பெற்ற ஜோடியான பவித்ரா-ரங்கேஷ் ஆகியோரை மித்ரா ஒன்று சேர்ப்பாரா? இல்லையா? என்று படத்தைப் பார்த்து அறியுங்கள்.

இப்படத்தில் விவாகரத்து செய்ய எண்ணும் இரு ஜோடிகளுடன் ஒரு பிரச்சினையும் இல்லாத மித்ராவையும், மனோவையும் மாற்றி மாற்றி காட்டப்படுகிறது. இதில் மித்ரா வழங்கும் ஆலோசனை பார்வை யாளர்களுக்கும் சேர்த்துக் கூறப்படுகிறது எனத் தெரிகிறது. உதாரணத்திற்கு, சண்டையை உண்டாக்கும் பல சிறு பிரச்சினைகளை பிறகு நினைத்துப் பார்த்தால் அவை நகைச்சுவையாகத் தோன்றும் எனவும், திருமணத்தில் ஏற்படும் பல சண்டைகள் வேறு வெளிக் காரணத்தால் ஏற்படும் தாக்கத்தால் ஒருவர் கோவப்படுவதால் உண்டாகின்றன எனவும் மித்ரா கூறுகிறார். ஆலோசனை வழங்கும் கதாபாத்திரம் ஒரு பெண் என்பதாலும் மித்ராவின் சிறந்த நடிப்பாலும் படம் சிறப்பாக அமைந்துள்ளது.

இருந்தாலும் படத்தில் பிரச்சினைக்கும், ஆலோசனைக்கும் பெரும்பாலான நேரம் ஒதுக்கப்படுவதால் தீர்வுகள் மிக விரை வாக நடைபெறுகின்றன. திருமணம் விவகாரத்து வரை செல்லும் அளவிற்கு ஏற்பட்ட பிரச்சினைக்கு ஏற்ப தீர்வும் நிலைத்து நிற்கும் என்று நம்பக் கடினமாக உள்ளது.

அதாவது படத்தில் ஒருமுறை மன்னிப்புக் கேட்ட பின்னர் பிரச்சினை ஏற்படுத்தியவ ரின் பழக்கம் முழுதாக மாறிவிட்டதா என்று தெரியவில்லை. மன்னிப்பு கேட்டால் மட்டும் போதுமா? என்ற கேள்வி எழுகிறது.

மறுபக்கத்தில், மித்ரா கற்ற பாடத்திற்கு ஏற்ப சண்டையும், பிரச்சினையும் இல்லா மல் மனோவுடன் வசதியுடன் வாழ்வதைப் பார்க்க நன்றாகவும், குறிப்பிடத்தக்கதாவும் இருந்தது. பார்க்க நன்றாக இருந்தாலும் தனது வாழ்க்கையில் பிரச்சினையோ, சண்டையோ ஏற்பட்டால் தாங்களும் பிரிந்திடுவோமோ என மித்ரா அஞ்சுகி றாள். இதனால் மனம் திறந்து பேச அஞ்சும் மித்ராவின் வாழ்வு எவ்வாறு பாதிக்கப்படுகிறது எனவும் இப்படத்தில் காணலாம். இந்தக் கதை பார்க்கப் புதிதாக இருக்கிறது.

ஒருவருடன் எவ்வாறு சண்டைகளை ஏற்படுத்தாமல் பழகுவது எனக் காட்ட எண்ணும் இப்படத்தை அனைவரும் பார்க்கலாம்.

---

# பேராசிரியர்...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

இலக்கிய உறவுகளைப் பேணி வளர்த்ததும் மீனாட்சி ஆச்சியின் பங்களிப்பே.

எல்லாவற்றிற்கும் மேலாகப் பேறு காலத்தில் அவர்கட்குத் துணையாக



நிற்காமல் நான் இயக்கப் பணியாகச் சிறை சென்றது குறித்தும் முகம் கோணாமல் என்னோடு தொடர்ந்து பழைய அன்போடு இயைந்து வாழ்ந்த சிறப்பு நினைந்து பாராட்டத்தக்கது.

**கேள்வி 8:** கனடாவில் அடுத்த தலை முறையினரின் தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதாக நீங்கள் அவதானித்த சில காரணங்களைக் குறிப்பிட முடியுமா? இத்தகைய தடைகளை எவ்வாறு தாண்ட முடியும்?

**பதில்:** கனடாவில் பிறந்து வளர்ந்த, வளரும் தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள், தம்மைச் சுற்றிலும் பேசப்படுகிற ஆங்கில மொழியைச் சார்ந்தே வாழ்கின்றனர். இந்நிலை நீடித்தால் மொரீசியசு, தாய்லாந்து போன்ற நாடுகளில் வாழ்வது போன்ற தமிழ் அறியாத தமிழர் எண்ணிக்கை கனடாவிலும் மிகுந்து விடும்.

இத்தடையைத் தாண்டச் செய்ய



வேண்டியவை:

1. தமிழ்க் குடும்பத்தினர் வீட்டில் தமிழையே பேச்சு மொழியாகக் கொண்டு பேசி, குழந்தைகளின் தமிழ்ப் பேச்சு நிலையை வளர்க்க வேண்டும்.

2. தங்கள் பிள்ளைகளைத் தமிழ்மொழி பயிற்றும் பள்ளிகளில் சேர்த்தல் வேண்டும்.

3. அதற்கு வாய்ப்பில்லாத சூழலில், பெற்றோர் தம் ஓய்வு நேரத்தில் குழந்தை களுக்குத் தமிழில் எழுதப் படிக்கத் தேவையான அடிப்படைப் பயிற்சியைக் கொடுக்க வேண்டும்.

4. தமிழில் வெளிவந்துள்ள குழந்தை இலக்கிய நூல்களைத் தங்கள் குழந்தை களுக்கு வாங்கிக் கொடுத்துப் படிக்கச் செய்யவேண்டும்.

**கேள்வி 9:** நீங்கள் அவதானித்த வகையில் கனடியத் தமிழர் ஆடம்பரத்தில் மட்டும் நேரத்தைச் செலவிடுகின்றார்களா? அல்லது மொழி, பண்பாடு, கலாசாரத்தை யும் வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறார்களா?

**பதில்:** எனக்குத் தெரிந்தவரை கனடா தமிழரில் ஆடம்பரத்தில் நேரம் செலவிடு வோர் மிகச் சிலராக இருக்கலாம். அல்லது இல்லவே இல்லை என்றே கூறலாம். ஆனால் தம் வாழ்க்கைத் தேவைகளுக்கான அவசியங்களைப் பற்றி மட்டுமே சிந்தித்து, மொழி போன்றவற்றை வளர்ப்பதில் குறைந்த அளவில் ஈடுபடுபவர்களாகவே பெரும்பாலானோர் (குறிப்பாக இந்தியாவிலிருந்து வந்த தமிழர்) வாழ்கின்றனர் என்பது என் கருத்து.

இவ்வகையில் ஈழத் தமிழர் மொழி, பண்பாடு வளர்க்கும் முயற்சியில் கூடுதல் நேரம் செலவிடுவதாகவே நான் கருதுகிறேன்.

**கேள்வி 10:** கனடாவின் முத்தமிழ் வளர்ச்சியில் முன்னேற்றம் இருக்கிறதா? அப்படியானால் நீங்கள் அவதானித்ததைக் குறிப்பிட முடியுமா?

**பதில்:** கனடாவில் தமிழ் வளர்ச்சி நல்ல முறையிலேயே காணப்படுகிறது என்பது என் (குறைந்தகால) அனுபவத்தில் நான் கண்டறிந்த செய்தி.


மீண்டும் இவ்வகையிலும், இந்தியத் தமிழரைக் காட்டிலும் ஈழத் தமிழரின் செயற்பாடே சிறப்புடையது போற்றத்தக்கது என்பது என் எண்ணம்.

அந்த அளவு மொழி வளர்ச்சியில் ஈடுபாடு இந்தியத் தமிழரிடம் காணப்படுவதாக எனக்குத் தெரியவில்லை. "கனடா தமிழ்ச் சங்கம்" என்ற ஒரு அமைப்புத்தான் ஓரளவு செயற்படுகிறது என நினைக்கிறேன்.

படைப்பு, திறனாய்வு, இதழ்கள் என்று பல வகையிலும் ஈழத் தமிழரின் தமிழ் வளர்ச்சிப் பணிகள் குறிப்பிடத்தக்கவை பாராட்டத்தக்கவை.

எனது பதில்கள் அனைத்தும் ரொறொன்ரோ நகரில் மட்டுமான எனது அனுபவ வெளிப்பாடே. கனடாவின் ஏனைய பகுதிகள் பற்றி எனக்கு நேரடி அனுபவம் எதுவும் இல்லை. வாசகர்களுக்கு எனது வாழ்த்துகள்.

For your Special Occasions
SHORT TERM RENTAL
TORONTO
Large House available for your Special Occasions Short Term Rental in Scarborough. Daily rental possible.
If Interested email :
georgeparan1@gmail.com



தன்னைப் போல் எல்லோருக்கும் 1000 பிரச்சினைகள் இருக்கும் என உணர்ந்தவர்கள் யாரிடத்திலும் கோபமோ பிழையோ கண்டுபிடிக்க மாட்டார்கள். உணராதவர்களே உறவையும் நட்பையும் உதறி விடுகிறார்கள்.






வவுனியா, அன்ராசபுரம் (அனுரதபுரம்), புத்தளம், நீர்கொழும்பு, எயர்போட், கோட்டை, மருதானை, வெள்ளவத்தை, மினிவான் உதவியாளர் (மினி கொண்டக்டர்) வாங்கும் சம்பளத்திற்கு ஏற்றவாறு கத்திக்கொண்டேயிருந்தார்.

அண்ணை ரெலிபோனை மூடிப்போட்டு வாங்கோ சரி உலகண்ணை வட்ஸ்அப் வரதன் மூச்சு இரைக்க இரைக்க உலகருடன் கதைத்துக் கொண்டு நடந்தார். கொழும்பு வான் வெளிக்கிடப்போகுது. உங்களை வேளைக்கு எழுப்பிப் போட்டன் போல கிடக்குது. நாளைக்கு கூட்டணி புது தலைமை. எல்லாம் அப்டேற்பண்ணுறன்.




பமிலி டேக்கு வந்திடுவன் (ரகசியமாக) வந்து 6 மாதமாச்சு சிலவேளை பென்சனை நிப்பாட்டினாலும் என்று சொல்லி முடிப்பதற்குள்.



அண்ணை நீங்கள் கனடாவோ?


கொண்டக்டர் பெலத்து கேட்டார். அண்ணை நீங்கள் கனடாவோ?

ஓம் நான் போய் 25 வருசமாச்சு என வட்ஸ்அப் வரதன் பெருமையாகக் கூற முதல் கொண்டக்டர் கேட்டார் வெளிநாட்டிலை இருந்து வாறவையெல்லாம் வந்த நாள்ளையிருந்து போகும்வரையும் தனி வான்பிடிச்சு ஓடித்திரியினம். நீங்கள் என்னெண்டா...என முணுமுணுத்தான்.



ராசம்மா, உலகர், ஆட்டிலறி அன்னம்மா உலகச்செய்திகளை தங்கள் அறிவுக்கு எட்டிய மட்டில் அலசி ஆராய்ந்து கொண்டிருந்தனர். கதவுக்கு வெளியே இருமலுடன் கேன் (ஊன்றுகோல்) ஊன்றிவரும் சத்தம் கேட்டது. செல்லம்மா வாறா என ராசம்மாவின் காதில் முணுமுணுத்தா ஆட்டிலறி அன்னம்மா.

இந்தமுறை பனியுமில்லை குளிருமில்லை என்றபடி வந்தா செக்கண்ட் புளோர் செல்லம்மா.



செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே.

தமிழகத்தில் தனியார் ஆங்கிலப் பாடசாலையில் தமிழில் பேசிய மாணவனின் காதை ஆசிரியை திருகியதால் மாணவனின் செவிப்பறை கிழிந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறான்.

தாமோதரம் புத்தகங்களை அறிவு நுல்களை படித்தால் மட்டும் போதாது.




பெரும் செல்வந்தர் பட்டடினத்தார் வளர்ப் பு மகன் எழுதிய அறிவுரை "காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே" பட்டினத்தார் வாழ்க்கையையே மாற்றியது. சுவேதாரன்யன் திருவெண்காடர். காவிரிப்பூம் பட்டினத்தில் பிறந்ததால் பட்டினத்தார் என அழைக்கப்பட்டார்.

தாமோதரம் அறிவுரை சொல்வதற்கும் கேட்டு அதன்வழி நடப்பதற்கும் வயதெல்லை கிடையாது.

தி.மு.க பொருளாளரான எம்.ஜி.ஆர். மழை வெள்ளம் வந்தபோது ஆட்டோக்காரர்களுக்கு றெயின்கோட் கொடுத்தார். அவரது மனம் செயல் கொடைவள்ளல் என பெயரெடுத்தார்.

பொருள், செல்வம் எவ்வளவு இருந்தாலும் அதனை தேவையறிந்து மற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்க பழகவேணும்.

முருகேசர் நீண்ட பிரசங்கமே செய்து முடித்தார்.



உலகர் திரும்பி தாமோதரத்தை பார்த்தார். இந்தியாவிலிருந்து திரும்பிய களை. குறட்டை விடாமல் தூங்கி விட்டான் தாமோதரம்.


உலகர் அதை காட்டிக் கொள்ளாமல் சற்று உரத்து காருக்கு ரிக்கற் வைக்கப் போறாங்கள். தாமோதரம் எழுந்து சரி முருகேசண்ணை போட்டு வாறன் என சொல்லிவிட்டு உலகரும் தாமோதரமும் வெளிக்கிட உலகரின் ரெலிபோன் மினுங்க உலகர் கண்ணாடியை போட்டு ரெலிபோனைப்பார்த்தார். வட்ஸ்அப் வரதன். வரதனின் ரெலிபோன்.

ஹலோ உலகண்ணை நான் நிக்கிற ஏரியாவிலை கலவரம். அத்தோடு ரெலிபோன் கட்டாகி விட்டது.

## பெப்ரவரி 01 - 15



03. அறிஞர் அண்ணா சி.என். அண்ணாதுரை நினைவு தினம். தமிழகத்தின் 6ஆவது முதலமைச்சர் (1909-1969)



04. சர்வதேச கான்சர் தினம்
04. ஆங்கிலேய ஆட்சியிலிருந்து இலங்கை சுதந்திரமடைந்தது (சுதந்திரம் எங்கே என மக்கள் இன்றுவரை கேட்டுக் கொண்டிருக்கின்றனர்)



07. (1956) இலங்கையில் தனிச் சிங்களச் சட்டம் களனி மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.
09. சட்டமேதை ஜி.ஜி. பொன்னம்பலம் நினைவு தினம் (1901-1977)
11. அடங்காத்தமிழன் சி. சுந்தரலிங்கம் நினைவு தினம்.
14. காதலர் தினம் (வலன்ரைன் டே)




# பிரபல பின்னணி பாடகியும் இசையமைப்பாளர் இளையராஜாவின் மகளுமான பவதாரணி காலமானார்



இசை மேதைகளைக் கொண்ட குடும்பத்தில் பவதாரிணி 1976ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி பிறந்தார். தனது இனிய குரல் வளத்தால் பல திரைப்படங்களில் பின்னணி பாடியுள்ளார். 1984ஆம் ஆண்டு வெளியான மை டியர் குட்டிச்சாத்தான் படத்தில் பாடியிருந்தார்.

இளையராஜா, கார்த்திக் ராஜா, யுவன் சங்கர் ராஜா, தேவா, சிறீகாந் தேவா, ஹாரிஷ் ஜெயராஜ் உள்ளிட்ட பலரின் இசையிலும் பின்னணி பாடல்களை பாடியுள்ளார்.

இளையராஜாவின் இசையில் பாரதி திரைப்படத்தில் 'மயில் போல பொண்ணு ஒண்ணு' என்ற இவர் பாடிய பாடல் இவருக்குச் சிறந்த பின்னணிப் பாடகருக்கான தேசிய விருதைப் பெற்றுத் தந்தது. அத்துடன் தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மொழித் திரைப்படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

காதலுக்கு மரியாதை திரைப்படத்தில் என்னைத் தாலாட்ட, ஓ பேபி, தாமிரபரணி திரைப்படத்தில் "தாலியே தேவை இல்லை நீ தான்" அழகி திரைப்படத்தில் ஒளியிலே தெரிவது, அனேகன் திரைப்படத்தில் ஆத்தாடி ஆத்தாடி, மாமனிதன் திரைப்படத்தில் பண்ணப்புரத்து போன்ற பாடல்கள் இவரது குரலின் தனித்துவத்திற்கு அடையாளமாக சொல்லலாம்.

ஆர். சபரிராஜ் என்பவரை 2005ஆம் ஆண்டு 03 ஒகஸ்ற் திருமணம் செய்தார் பவதாரிணி. தனது 47ஆவது அகவையில் 2024 ஜனவரி 25 அன்று காலமானார். அவரது மரணம் இசை உலகிற்கு பேரிழப்பாகும்.

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!



ஒரு முறை லண்டனில் நடந்த கூட்டத்தில், ஆங்கிலத்தில் '**complete**' என்ற சொல்லுக்கும் '**finished** ' என்ற சொல்லுக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்று கேட்டார்கள்.

கூட்டத்தினர் இரண்டு சொல்லுக்கும் எந்த ஒரு வித்தியாசமும் இல்லை என்று கூறினர். அப்போது அறிஞர் அண்ணா கூறினார்....

"நீங்கள் ஒரு சரியான பெண்ணை திருமணம் செய்தால், உங்கள் வாழ்கை '**complete**'. அதுவே "நீங்கள் ஒரு தவறான பெண்ணை திருமணம் செய்தால், உங்கள் வாழ்கை '**finished**'.

அதுவே அந்த சரியான பெண் உங்களை ஒரு தவறான பெண்ணுடன் கையும் களவுமாக பிடித்து விட்டால் உங்கள் வாழ்கை '**completely Finished**" என்றார்.

இந்த விளக்கத்தை கேட்ட கூட்டத்தினர் எழுந்து நின்று 5 நிமிடம் கை தட்டினர்.

- வேணி -

# மரியாதை வாழ்வே சுகவாழ்வு



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

மனிதநேயம், மனிதப்பண்பாடு, நற்குணங்கள், நற்செயல்கள், தயவு, பணிவு நன்னடத்தை நமக்கு சமுதாயத்தில் தேடித்தரும் நன்மதிப்புத்தான் மரியாதையாகும். மரியாதை என்பது மரியாதைக்குரிய செயலைக் குறிக்கும் ஒரு நேர்மறையான உணர்வு. இது ஒரு நபர் அல்லது பொருளை வணங்குதல், பாராட்டுதல் மற்றும் அங்கீகாரம் பெறுவதற்குச் சமம். மரியாதை என்பது வணக்கத்தை அல்லது வணக்கத்தைக் காண்பிப்பதற்கான ஒரு வழியாகவும் ஒருவரை வணங்குவதற்கும் அல்லது மரியாதை செலுத்துவதற்கும் ஒரு வழியாகும். பன்மையில் மரியாதை என்ற வார்த்தையை நாம் பிரயோகிக்கும்போது மரியாதைக்குரிய வாழ்த்துக்கள் என்று பொருள். மரியாதை என்பது மற்றொரு நபருடன் எல்லாப் பகுதிகளிலும் உடன்படுவதைக் குறிக்காது, ஆனால் அந்த நபரின் வாழ்க்கைமுறை மற்றும் அவர்களின் முடிவுகளின் காரணமாக அந்த நபரை பாகுபாடு காட்டவோ அல்லது புண்படுத்தவோ கூறப்பட்ட முடிவுகள் எந்தத் தீங்கும் ஏற்படுத்தாது அல்லது மற்றவர்களை பாதிக்காது அல்லது அவமதிப்பதில்லை. மரியாதை என்பது தார்மீக மதிப்பு. தார்மீக மதிப்புகள் என்பது பொதுவான நடத்தைக்கான சரியான வடிவங்களை வரையறுக்க சமூகம் மற்றும் பாரம்பரியத்தால் உருவாக்கப்பட்ட கொள்கைகளாகும். சுய மரியாதை என்பது நம்மீது நாமே மரியாதையாக, நம்மை யாரும் தாழ்த்த, தரக்குறைவாக நடத்தவிடாமல் இருக்கும்படி நடப்பது. நம்மை மற்றவர்கள் மதிக்க வேண்டும், நம்மை நேசிக்க வேண்டும், நம் சொல்லுக்கு எதிர்ச்சொல் சொல்லாமல் கேட்டல் இப்படியாக நாம் நினைத்துக்கொள்ளல் ஆகும். சுய மரியாதை என்பது தவறுக்கு தலை வணங்காது, தன்நிலை மாறாது, தன்சுயம் காத்து தனித்து நிற்பது.

மரியாதை என்பது சற்று நலிவடைந்துதான் உள்ளது. எனவேதான் இன்றும் மரியாதையாகப் பேசு, மரியாதை கொடுத்து மரியாதை வாங்கு என்ற சொற்றொடர்களை கேட்டவண்ணம் இருக்கிறோம். நம்முடைய நற்செயல்கள், நன்னடத்தை குறித்து நாம் பெருமையும், பெருமிதமும் கொள்வது நமக்கு சுய மரியாதை உணர்வை உருவாக்கும். மரியாதையான தார்மீக மதிப்புகள் மனிதருக்கு மிக முக்கியமான, அது ஒருகளிப்போடு சமூக ஒருங்கிணைப்பும் அடைய அவசியம். மதிக்கப்படுவதை அறிந்துகொள்வது அல்லது மதிக்கக் கற்றுக்கொள்வது அவசியம். மரியாதையில் பரஸ்பரம் இருக்கவேண்டும். மேலும் பரஸ்பர உணர்விலிருந்து பிறக்க வேண்டும். மரியாதை என்பது மற்றொரு நபருடன் ஒவ்வொரு வகையிலும் உடன்படுவதை குறிக்காது. நவீன சமூகங்களில் மிகவும் பெறுமதியானது எனக்கு ஒரு ஆரோக்கியமான உடனிருப்புடனான உறுதி. மற்றவர்களுடன் ஆரோக்கியமான உறவைக் கொண்டிருப்பதற்கான அத்தியாவசிய விதிகளில் ஒன்றாகும்.

மரியாதை என்பது கீழ்ப்படிதல் மற்றும் சில விதிகளுக்கு இணங்குதல் போன்ற உணர்வாக வெளிப்படும். மரியாதை பொதுவாக பல்வேறு இடங்கள் மற்றும் செயற்பாடுகளில் பல்வேறு தனிப்பட்ட உறவுகளில் மேற்கொள்ளப்படுகின்றன.




மரியாதை என்பது பெற்றோர்க்கு, வயதானவர்களுக்கு, சுற்றுச்சூழலுக்கு, சமூகநிறுவனங்களுக்கு, விதிகளுக்கு, தேசிய சின்னங்களுக்கு செலுத்துவதைக் குறிக்கும். சுயமரியாதை என்பது நமது இலக்குகளை திறமையாக அடைவதற்கு ஒரு முக்கிய பண்பாகும். "பண்பு உடையார்ப் பட்டுஉண்டு உலகம் அது இன்றேல் மண்புக்கு மாய்வது மன்" எனும் குறளில் நல்ல பண்புடையவர் வாழ்வதால்த்தான் இந்த உலகம் இயங்குகிறது. இல்லையெனில் உலகம் அழிந்துவிடும் என்கிறார் வள்ளுவர். சுயமரியாதை நம்மைப்பற்றிய மதிப்பீடு, எங்கள் திறன்கள் மற்றும் நமது ஆளுமை பற்றிய போதுமான கருத்தை அடிப்படை யாகக் கொண்டது. உயர்ந்த சுயமரி யாதை உள்ள ஒருவர் ஓர் ஆணவமாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

பணம், பதவியால்வரும் மதிப்பு, மரியாதை நிலையானதன்று. பணமும், பதவியும் நம்மை விட்டுச் செல்லும்போது மதிப்பும், மரியாதையும் நம்மைவிட்டுச் சென்றுவிடும். பணம், பதவி படைத்தோரை மரியாதை நிமித்தமாகச் சந்திப்பதில் ஒரு சுயநலம் இருக்கிறது. இன்று ஒரு வணக்கம் போட்டுவைத்தால் நாளை ஏதோ ஒன்றுக்குப் பயன்படும் என்னும் நினைப்பில் தன்னலம் இருக்கிறது அல்லவா? இதை அதிகமானோர் செய்கின்றனர். பெரியவர்களை இயல்பாக சந்திப்பதில், வணக்கம் செலுத்துவதில் தவறில்லை. வலிய சென்று சந்திப்பதில்தான் தவறு உண்டு. நாம் ஒருவருக்கு அதிக மரியாதை கொடுத்து நமது சுயமரியாதையை காயப்படுத்திவிடக் கூடாது. "மதியாதார் வாசல் மிதியாமை கோடி பெறும்" என்பதை மனதில்கொண்டு போலிப் பெரியவர்களை சுயமரியாதை உடையவர்கள் சந்திக்க விரும்புவதில்லை.

ஒவ்வொரு முறையும் நாம் மரியாதையுடன் செயல்படும்போது வாழ மிகவும் நியாயமான நட்பான உலகத்தை உருவாக்க உதவுகிறோம். மனிதனாக இருப்பதற்கு மட்டுமே மற்றவர்க்கு மதிப்பளிப்பது, அவர் தோற்றமளித்தாலும் தன்னை வெளிப்படுத்திக்கொண்டாலும் அல்லது வித்தியாசமாக நினைத்தாலும் அவரை சமமாகக் கருதுவது ஒரு தார்மீக மதிப்பாக மரியாதைக்குரிய மிக உயர்ந்த வெளிப் பாடுகளில் ஒன்றாகும். மரியாதை நம்மை நாமே கருத்தில் கொண்டு தொடங்குகிறது. நாம் ஒருவருக் கொருவர் அதேமரியாதை யுடன் நடந்து கொள்ள வேண்டும். மற்றவர்களை மதிக்க வேண்டும். மற்றவர்களை மதிக்கும் இயல்பு குறைந்த வண்ணம் உள்ளது. சுய மரியாதையை அறிந்துகொள்வதன்மூலம் மட்டுமே நாம் மற்றவர்களையும் அதே வழியில் நடத்த முடியும். மரியாதைக் குரியது மனிதனின் மிக முக்கியமான தார்மீக விழுமியங்களில் ஒன்றாகும். மரியாதையும் கற்றுக்கொள்ளப்பட வேண்டும். சிலர் மற்றவருடன் பேசும் போது மரியாதை குறைவாகப் பேசுவார். அது கேட்பதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். ஒருவர் மற்றவருடன் பேசும் போது அவமதிப்புக்கு ஆளாகாமல், உணர்திறன் மற்றும் பிரதிபலிப்பு வழியில் பேசுவது மரியாதையாகப் பேசுவதாகும். நாம் பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க நமக்குத் தானாகவே வரக்கூடியது மரியாதை ஆகும். மரியாதை வெளிப்பாடு என்பது பன்முகத் தன்மை கொண்டது. மரியாதை என்பது மகிழ்ச்சியின் ஒருங்கிணைந்த பகுதியாகும். மற்றவர்களின் தகுதிகளை அங்கீகரிப்பதுமாகும்.

சுயமரியாதையை கெடுக்காது வாழப்பழக வேண்டும். சுயமரியாதையில் கவனம் செலுத்துவதால் பல சாதகமான விளைவுகளை அனுபவிக்கலாம். சுயமரியாதை உள்ளோர் புத்திசாலித்தனமானோர் என்று கூறுவர். மன்னிக்கும் திறன் வளரும், திறன்களை மேம்படுத்தும், இலக்குகளைத் தூண்டும், முறைகளை வழிநடத்தும், பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மற்றும் சமாளிக்கும் திறமை கிட்டும், சிறந்த மன ஆரோக்கியம் கிடைக்கும், வாழ்க்கையில் மோதல்கள் மற்றும் நச்சு சூழ்நிலைகளை தவிர்க்க உதவும், வாழ்க்கையின் குறிக்கோள்களை அடையவழிகோலும், நமது பொறுப்புக்களை சிறந்த வழியில் ஏற்றுக்கொள்ளவும், நிறைவேற்றவும் உதவும், நல்ல உறவை வளர்த்துக்கொள்ள உதவும், மிகவும் உறுதியான மற்றும் பாதுகாப்பான வழியில் முடிவுகளை எடுக்க உதவும். கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும். சுயமரியாதை இருக்கும் இடத்தில்தான் சுயஒழுக்கம் பிறக்கிறது. சுயமரியாதை நேர்மையாகப் பணியாற்றும். சுயமரியாதை என்பதை நமக்கு நாமே கொடுக்கத் தவறும்போதுதான் மரியாதை என்பதை பிறரிடம் இழந்துவிடுகிறோம்.

சுயமரியாதை இழந்து வாழ்பவன் சுய நினைவு இழந்து வாழ்பவனுக்குச் சமம். எதிரிகளின் அவமானங்களைக் காட்டிலும் நெருங்கியவர்களின் அன்புக்காகவே சுய மரியாதையை அதிகம் இழக்கிறோம். சண்டைக்குப்பின் கோபங்களையும், பிடிவாதங்களையும் விட்டுவிட்டு முதலில் நாமே பேசத் தொடங்குவது பேரன்பின் வெளிப்பாடேயன்றி அது மரியாதையின் தோல்வி அல்ல. உன்னை, உன் உண்மை அன்பை மதிக்காத இடத்தில் பிணமாகக்கூட இருக்காதே. தகுதி இல்லாத இடத்திலே தங்கமே கொடுத்தாலும் துருப்பிடித்த தூசி மாதிரித்தான் பார்ப்பார்கள். சரியான இடத்திலே அன்பு செய்தால்தான் அன்புக்கு மரியாதை. நீ செய்த தானமும், தருமமும், நீ செய்த பாவமும், புண்ணியமும், நீ கொடுத்த மதிப்பும், மரியாதையும், நீ செய்த துரோகமும், சூழ்ச்சியும், ஏமாற்றமும் ஒரு நாள் உன்னைத் தேடி வந்து நீ செய்ததைவிட சிறப்பாக பல மடங்கு செய்துவிட்டுப் போகும். எனவே மரியாதை வாழ்வே சுகவாழ்வு என்பதைப் புரிந்து வாழுங்கள். வாழ்வு சிறக்கும்.

| அன்றும் | இன்றும் |
|---|---|
| அன்று - வீடு நிறைய குழந்தைகள். | இன்று - வீட்டுக்கொரு குழந்தை. |
| அன்று - பெரியவர் சொல்லி பிள்ளைக் கேட்டனர். | இன்று - சிறியவர் சொல்ல பெரிய ர் முழிக்கிறார்கள். |
| அன்று - குறைந்த வருமானம் நிறைந்த நிம்மதி. | இன்று - நிறைந்த வருமானம் குறைந்த நிம்மதி. |
| அன்று - படித்தால் வேலை. | இன்று - படிப்பதே வேலை. |
| அன்று - வீடு நிறைய உறவுகள். | இன்று - நிறைய வீடுகள் உறவுகள் இல்லை. |
| அன்று - உணவே மருந்து. | இன்று - மருந்துகளே உணவு. |
| அன்று - முதுமையிலும் துள்ளல். | இன்று - இளமையிலேயே அல்லல். |
| அன்று - உதவிக்கு தொழில் நுட்பம். | இன்று - தொழில்நுட்பம் தான் எல்லாம். |
| அன்று - யோக வாழ்க்கை. | இன்று - எந்திர வாழ்க்கை. |
| அன்று - தியாகிகள் நாட்டை காப்பாற்றினர். | இன்று - அரசியல்வாதிகள் நாட்டை விற்கின்றனர். |
| அன்று -ஓடினோம் வயிற்றை நிறைக்க. | இன்று - ஓடுகின்றோம் வயிற்றை குறைக்க. |
| அன்று - பெரியோர் பாதையில். | இன்று - இளைஞர்கள் போதையில். |
| அன்று - வாழ்ந்தது வாழ்க்கை. | இன்று - ஏதோ வாழும் வாழ்க்கை. |